# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 12 செவ்வாய்க்கிழமை (27.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 31


## புலிகளின் பிரதேசத்தில் மாமனிதருக்கு அஞ்சலி

மட்டக்களப்பு,டிசெ.27

கிறிஸ்மஸ் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சமயம் தேவாலயத்துக்குள் வைத்துக் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் பூதவுடலுக்கு மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் அலை, அலையாகத் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தினர்.

ஜோசப் எம்.பியின் பூதவுடல்

(14ஆம் பக்கம் பார்க்க)



அஞ்சலிக்காக...

## ஜோசப்பின் படுகொலையால் சமாதான முயற்சிக்கு பாரிய அடி!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.27

''தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையானது சமாதான வழியில் தீர்க்கப்படவேண்டுமென்பதில் தெளிவான பற்றுறுதி கொண்டிருந்த ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையுண்டமை சமாதான முயற்சிகளில் வீழ்ந்த பாரிய அடி என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.''

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கின்றது.

கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் கூட்டாக விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாளை கிளிநொச்சியில் அஞ்சலி

கிளிநொச்சி,டிசெ.27

படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் 'மாமனிதர்' ஜோசப் பரராஜசிங்கத்தின் பூதவுடலுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நாளை கிளிநொச்சியில் வைத்து அஞ்சலி செலுத்தவுள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து இன்று வவுனியாவிற்கு கொண்டுவரப்படவுள்ள ஜோசப் எம்.பியின் பூத

(14ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ அடாவடித்தனத்தை எதிர்த்து

# யாழில் அரசின் நிர்வாகம் முற்றாகவே முடங்கியது

யாழ்ப்பாணம்,டிசெம்பர் 27

அரச படையினர் யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாக மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களைக் கண்டித்து நேற்றுமுதல் அரச ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் குதித்துள்ளனர். இதனால் அரச நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் முற்றுமுழுதாக முடங்கின. இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

அரச அலுவலகங்களுக்கு ஊழியர்கள் எவரும் வருகை தரவில்லை. தமது சொந்த அலுவல்கள் எவற்றையும் செய்யமுடியாத நிலையில் மக்கள் திண்டாடினர். இராணுவத்தினரின் அட்டகாசத்திற்கு ஒரு முடிவு வரும்வரையும் இந்தப் போராட்டம் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் மீதான படையினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இராணுவத்தினர் இலக்குவைத்துத் தாக்கப்படுவது அதிகரித்துள்ளதை அடுத்து, அவர்களின் செயற்பாடுகள் வரன்முறையற்றுச் சென்றுள்ளன. வீதியில் செல்லும் பொதுமக்கள் கண்டபடி மிகமோசமாகத் தாக்கப்படுகின்றனர். ஆங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று புதுடில்லி பயணம்

கொழும்பு,டிசெ.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று புதுடில்லி செல்லவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி உட்பட பலரைச் சந்தித்துப் பேசவுள்ளார். ஜனாதிபதியுடன் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, பேரியல் அஷ்ரப் உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்தியா செல்லவுள்ளனர். (க)

## சாவகச்சேரியில் மூவர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.27

சாவகச்சேரி பகுதியில் வைத்து மூன்று இளைஞர்களை படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி - அரசடி வீதிப் பகுதியில் வைத்து இவர்களை தடுத்து விசாரணை நடத்திய படையினர் அவர்களது கைகளைக் கட்டி வீதியோரம் அமர வைத்திருந்தனர் என்றும் - பின்னர் அவர்களை கூட்டிச் சென்றனர் என்றும் - பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புக்கொடிகளைப் பறக்க விட்டு இன்று துக்கம் அனுஷ்டிக்க அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

குடாநாட்டில் பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்தும், அப்பாவிப்பொதுமக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் படுகொலைசெய்யப்படுவதை ஆட்சேபித்தும் இன்று பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று கறுப்புக் கொடியைப்பறக்கவிட்டும் சோக கீதம் இசைத்தும் துக்கத்தைக் கடைப்பிடிக்குமாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் கேட்டிருக்கிறது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கட்டடங்களிலும், வர்த்தக நிலையங்களிலும், வாகனங்களிலும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த இரு நாள்களில் மட்டும் பதின்மூன்றிற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலு

(14ஆம் பக்கம் பார்க்க)

## 5 திட்டங்களுக்கு கடன் வழங்க உலக வங்கி திடீர் மறுப்பு

கொழும்பு, டிசெ.27

அடுத்த ஆண்டு இலங்கை அரசு மேற்கொள்ள விருக்கும் பாரிய ஐந்து அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கடன் உதவி வழங்க முன்னர் முன்வந்திருந்த உலக வங்கி, இப்போது அந்தநோக்கத்தைக் கைவிட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

உலக வங்கியின் இந்தத் திடீர் கைவிரிப்பு அரசியல், பொருளாதார வட்டாரங்கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பிட்ட ஐந்து அபிவிருத்தி திட்டங்களுக்கென உலகவங்கி சுமார் 2 ஆயிரத்து நூறு கோடி ரூபாவைக் கடனாக வழங்க முன்வந்திருந்தது என்றும், ஆனால் அந்தத் திட்டத்தை அது இப்போது நிறுத்திவைத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

துறைமுக வேலைத்திறனை அபிவிருத்தி செய்யும் முகமாக, இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு சுமார் 640 கோடி ரூபாவும்-

மேல்மாகாணத்தில் வதியும் சேரிவாழ் மக்களின் குடியேற்ற அபிவிருத்திக்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சுமார் 600 கோடி ரூபாவும்-

மின்சாரத்துறையின் மீளமைப்புக்காக

(14ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் பரவலாக கிரனேட் வீச்சுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ்ப்பாணத்தில் படையினர் மீது நேற்றும் பரவலாக கிரனேட் தாக்குதல்கள் இடம்பெற்றன.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் உள்ள காவலரணை இலக்குவைத்து நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் படையினர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் இடம்பெற்ற ஒரு மணி நேரத்தின் பின் மிருசுவில் மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள காவலரணை நோக்கியும் கிரனேட் வீசப்பட்டுள்ளது. எனினும் அது வெடிக்கவில்லை என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அதனைச் செயலிழக்கச் செய்தனர்.

நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோயில் வீதிப் பகுதியில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று மாலை 6 மணியளவில் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த காவலரண் மீது கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பிரதேசத்தை படையினர் சுற்றி வளைத்து தேடுதல் மேற்கொண்டனர்.

தட்டாதெருச் சந்தியில் அமைந்துள்ள காவலரண்மீது நேற்றிரவு 7 மணியளவில்

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஆழிப் பேரலை அனர்த்த ஓராண்டு நிறைவு நிகழ்வுகள்









யாழ்ப்பாணம்,டிசெ.27

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட உறவுகளுக்கும் ஏனைய மக்களுக்கும் நேற்றுத் திங்கட்கிழமை தமிழீழ தாயகம் சுடரேற்றி வணக்கம் செலுத்தியது.

தமிழர் தாயகத்தில் பொத்துவில் தொடக்கம் காரைநகர் வரைக்கும் பதினேழாயிரத்துக்கும் அதிகமான உயிர்கள் ஆழிப் பேரலையால் காவுகொள்ளப்பட்டன. இந்தப் பேரனர்த்தம் இடம்பெற்று நேற்றுடன் ஓராண்டு பூர்த்தியானது. இதனையொட்டி நேற்று நினைவொலி, அகவணக்கம், சுடரேற்றல் மற்றும் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

**வடமராட்சி கிழக்கு**

வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலையால் உயிரிழந்த உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட சதுக்கத்தில் முதலாவது சுடரை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றினார். மக்கள் தம் உறவுகளின் கல்லறைகளுக்கு முன் சுடரேற்றினர்.

நினைவுரையை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர்.

வடமராட்சி கிழக்கில் கரையோரப் பகுதிகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள படகுகளில் மக்கள் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டிருந்தனர்.

**புதுக்குடியிருப்பு**

ஆழிப்பேரலையால் உயிரிழந்த மக்களின் நினைவாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்ட நினைவு சதுக்க திறப்பு விழாவும் நினைவு நிகழ்வும் நேற்று புதுக்குடியிருப்பில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தா.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தாவும் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும் ஏற்றினர்.

நினைவு சதுக்கத்திற்கான பெயர்ப் பலகையினை புதுக்குடியிருப்பு வணிகர் கழக போசகர் பே.கந்தசாமி திரைநீக்கம் செய்து வைத்தார்.

நினைவு சதுக்கத்தினை செ.முகுந்தன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நினைவுச் சதுக்கத்தில் நினைவுச் சுடரினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைக்க, தொடர்ந்து உறவினர்களால் சுடர் ஏற்றப்பட்டு மத வழிபாடு நடைபெற்றது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சுண்டிக்குளம் பகுதியில் ஆழிப்பேரலையால் காவுகொண்ட 33 பேர்களினதும் ஓராண்டு நினைவு நிகழ்வு கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கல்லாற்று கிராமத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் ஏற்றி வைத்தார்.

தேசியக் கொடியினை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார். ஈகைச் சுடர்களை சமயத்தலைவர்கள் ஏற்றிவைத்தனர்.

மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த 33 பேர்களது படங்களுக்கு ஈகைச்சுடரேற்றி மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

**திருகோணமலை**

திருகோணமலையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த 34 குடும்பங்களுக்கு நேற்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும் செய்திகள், படங்கள் 7ஆம், 11ஆம் பக்கங்களில்

திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தனைகளும் நடைபெற்றுள்ளன.

**வவுனியா**

ஆழிப்பேரலையால் உயிரிழந்த மக்களின் ஆத்மசாந்தி வேண்டி வணக்க நிகழ்வு புளியங்குளம் சோதனை நிலையத்தில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை சுமையூந்துப் பிரிவுப் பொறுப்பாளர் வேல்ராஜ் ஏற்றிவைத்தார்.

ஈகைச் சுடரினை தமிழீழ கல்விக் கழக துணைப்பொறுப்பாளர் அருண், புளியங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீப் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஆசிரியூர் சத்தியானந்தன், ஆசிரியர் ஜெயச்சந்திரன், தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாள அருண் மாஸ்டர் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர்.

**மன்னார்**

ஆழிப் பேரலையால் உயிர்நீத்த மக்களின் ஆத்மசாந்தி வேண்டி மன்னார் மடுமாதா தேவாலயத்தில் வழிபாடுகள் நடைபெற்றன.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை திருப்பலி ஒப்புக்கொடுத்து வழிபாடி இயற்றினார். இதில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு உயிரிழந்தோரின் ஆத்மசாந்தி வேண்டி வழிபாட்டில் ஈடுபட்டனர்.

**மட்டக்களப்பு**

ஆழிப்பேரலைத் தாக்கத்தின் ஓராண்டு நினைவுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டன.

மட்டக்களப்பில் பிரதான ஆழிப்பேரலை நினைவு நிகழ்வுகூரல் நிகழ்ச்சி நாவலடி கிராமத்தில் நடைபெற்றுள்ளது. அங்கு அமைக்கப்பட்டிருந்த ஆழிப்பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவுத்தூபியை மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி திறந்துவைத்தார்.

டச் பார் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபியினை மட்டக்களப்பு, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை திறந்து வைத்தார்.

புது முகத்துவாரம் காயத்திரி சப்த ரிஸி வளாகத்தில் ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்டவர்களை நினைவுகூரும் நினைவுத்தூபியினை காயத்திரிச்சித்தர் கலாநிதி ஆர்.கே.முருகேசு சுவாமிகள் திறந்து வைத்தார்.

**அம்பாறை**

அம்பாறை திருக்கோவிலில் சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த 434 பேரின் நினைவாக திருக்கோவில் நாட்டுப்பற்றாளர் நினைவிடத்திற்கு அருகாமையில் அனர்த்தத்தில் உயிரிழந்த அனைவரினதும் பெயர்கள் பொறிக்கப்பட்டு நினைவுத்தூபி அனர்த்தத்தில் தாய், தந்தையரை இழந்த பெண்ணொருவரினால் திறந்து வைக்கப்பட்டது. (ஓ-6-353)

## பல்கலை வெட்டுப்புள்ளி இன்று

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இன்று வெளியிடப்படவுள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விபரங்கள் வெளியிடப்படவிருந்தன. ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு புள்ளி விபரத் தாள் சமர்ப்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டமையால் இன்று இவ் வெட்டுப்புள்ளி வெளியிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாத முடிவில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதே ஆணைக்குழுவின் நோக்கம் என்றும் -எதிர்வரும் கல்வியாண்டில் பல்கலைக் கழகங்களில் 17 புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஓ-6)

## பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு கண்டாவளையில் இன்று முதல் மீளாய்வு

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரைச் தெரிவு செய்வதற்கான மீளாய்வுப் பணிகள் இன்று முதல் நடைபெறவுள்ளன என்று கண்டாவளைப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

மீளாய்வுப் பணி இடம்பெறும் கிராம சேவையாளர் பிரிவுகளின் விவரம் வருமாறு:-

இன்று காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை - கண்ணகிபுரம் கிராம அலுவலர் பணிமனையிலும், தட்டுவன்கொட்டிப் பகுதிக்கான மீளாய்வுப்பணி தட்டுவன் கொட்டி அ.த.க.பாடசாலையிலும் இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம் - பிரமனந்தாறு கிராம அலுவலர் பணிமனையிலும், தருமபுரம் மேற்கு, கிழக்கு ஆகிய இரு பிரிவுகளுக்கும் தருமபுரம் கிராம அலுவலர் பணிமனையிலும் கண்டாவளைப் பகுதிக்கு பிரதேச செயலகத்திலும் முற்பகல் 9 மணிமுதல் மாலை 4 மணிவரையும் -

குமரபுரம் கிராமத்தில் முற்பகல் 9மணி முதல் நண்பகல் 12 வரை குமரபுரம் கிராம சேவையாளர் பணிமனையிலும், பிற்பகல் 2 மணிமுதல் மாலை 5 மணிவரை உமையாள்புரம், பரந்தன் ஆகியவற்றிற்கான மீளாய்வு பரந்தன் கிராம சேவையாளர் அலுவலகத்திலும் இடம்பெறும்.

எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை கோரக்கன் கட்டு, ஊரியான் மற்றும் முரசுமோட்டை ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் ஊரியான் பொது நோக்கு மண்டபத்திலும் புன்னை நீராவிக் கிராமத்தில் அப்பகுதி கிராம சேவையாளர் அலுவலகத்திலும் -

கல்மடு கிராமம், பெரிய குளம் கிராமம் ஆகிய பிரிவுகளில் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர் அலுவலகங்களில் முற்பகல் 9 மணிமுதல் 12 மணிவரையும் -

புளியம்பொக்கனை கிராமத்தில் பிற்பகல் 1மணிமுதல் மாலை 4 மணிவரை அப்பகுதி கிராம சேவையாளர் அலுவலகத்திலும் மீளாய்வுப் பணிகள் நடைபெறவுள்ளன.

எனவே, மேற்குறிப்பிட்ட இடங்களில் இடம்பெறும் மீளாய்வுப் பணிகளின் போது உதவிப் பணம் பெறுபவர்கள் கலந்துகொண்டு அடுத்த வருடம் இக் கொடுப்பனவை ஒழுங்கான முறையில் வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார்.

(ஓ-6,352)

## பிரபா படம் வைத்திருந்த இளைஞர் படையினரால் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,டிசெ.27

தனது கையடக்கத் தொலைபேசியில் விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனின் படத்தை வைத்திருந்தார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவர் படையினரால் மிகமோசமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. முத்திரைச் சந்தியில் அமைந்திருந்த இராணுவக் காவலரணில் இருந்த படையினர் குறிப்பிட்ட இளைஞனை வழிமறித்துச் சோதனையிட்டனர் என்றும் -

அவர் வைத்திருந்த கையடக்கத் தொலைபேசியைப் பரிசோதித்த படையினர் அதிலிருந்த பிரபாகரனின் படத்தைக் கண்டதும் அவரைக் கண்டித்துகண்மூடித்தனமாகத் தாக்கினர் என்றும் கூறப்பட்டது.

தாக்குதலின் பின்னர் சிலமணி நேரம் தடுத்துவைக்கப்பட்டிருந்த அந்த இளைஞர் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமாதானச் சூழலில் இவ்வாறு விடுதலைப் புலிகளின் படங்கள் வைத்திருப்பதும் எழுச்சிப் பாடல் நாடாக்கள், சி.டிக்கள் வைத்திருப்பதும் குற்றங்களாகக் காணப்படாத நிலையில் அனைவரும் அவற்றை வைத்திருந்தனர். இப்போது அவற்றை வைத்திருப்போரைப் படையினர் தாக்கி வருகின்றனர்.

இதற்கிடையே, முத்திரைச் சந்தியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கேணல் கிட்டுவின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த பூங்காவில் இருந்த அவரது படம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. பூங்காவில் இருந்த பெரிய மரங்களின் கிளைகளும் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன.

(ம-7-86)

## 'நெருப்பு நினைவுகள்' இறுவட்டு வெளியீடு



ஆழிப்பேரலை அனர்த்தத்தை வெளிப்படுத்தும் வகையிலான பாடல்கள் அடங்கிய 'நெருப்பு நினைவுகள்' இறுவட்டு வெளியீடு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

அரியாலையைச் சேர்ந்த எம்.வி.குமணாவின் ஆக்கத்தில் உருவாக்கப்பட்ட பாடல்களைக் கொண்ட இந்தத் தொகுப்பிற்கு ''ராகம்'' இசைக் குழுவின் இயக்குநர் ரி.எ.சந்திரன் இசையமைத்துள்ளார்.

ஆறு.திருமுருகன் இறுவட்டினை வெளியிட முதல் பிரதியை லயன் சொக்கலிங்கம் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் ஆறுதிருமுருகன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

### சடலங்கள் ஒப்படைப்பு

கடந்த சனிக்கிழமை இரவு ஈவினைப் பகுதியிலும், அச்சுவேலிப் பகுதியிலும் படுகொலையுண்டவர்களின் சடலங்கள் நேற்று மாலை 5 மணியளவில் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை இரவு யாழ்.கோட்டைப் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானோரில் யுவதி உட்பட மூவரின் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (ஓ-12-14)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அபத்தமான குற்றச்சாட்டுகளை சுமத்தும் அரச படைத்தரப்பு

*''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழுமையாக - முழு மனதுடன் - ஏற்று, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர். பல்வேறு சிக்கலான சூழ்நிலைகளில், பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும், ஆபத்துகளுக்கும் மத்தியில் மிகுந்த துணிவுடன் தமிழ்த் தேசியத்திற்கும், தமிழீழ விடு தலைப் போராட்டத்திற்கும் பல்வேறு வழிகளில் கைகொடுத்து உதவியவர்.''* - இவை, அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவை ஒட்டியும், அவருக்கு 'மாமனிதர்' எனும் பெரும் கௌரவத்தை அளித்தும் தலைவர் வே.பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட வாசகங்கள்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக நின்ற ஓர் உன்னதமான மனிதரை - உத்தம புருஷரை - இழந்த துக்கத்தில் துடித்துத், துவண்டு, துயரத்தில் மூழ்கி நிற்கின்றது தமிழர் சமூகம். இந்தச் சமயத்தில் இலங்கை அரசுப் படைத்தரப்பு விடுத்த அறிக்கை தமிழர்கள் மனதில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல அமைந்திருக்கிறது.

ஒரு யுத்தம் வெடிக்கும்போது முதலில் பலியாவது 'உண்மை' என்பார்கள். யுத்தத்தில் சம்பந்தப்படும் தரப்புகள் பிரசாரத்துக்காகவும் வேறு பிற நன்மைகளுக்காகவும் உண்மையைக் குழிதோண்டிப் புதைத்து, பொய்யை விதைப்புச் செய்வது வழமைதான். ஆனால், அதன் உச்சிக்கு இலங்கை அரச படைத்தரப்புப் போயிருப்பதுதான் இப்போது இங்கு இடம்பெறுகின்றது.

சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றுவதாக நினைத்துக் கொண்டு தான் நினைத்தபடி படைத்தரப்பு கட்டவிழ்த்து விடும் கதைகளைப் பார்த்துத் தமிழர்கள் அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் திகைத்துப் போய் நிற்கின்றார்கள்.

தமிழர் தாயகத்தில் அண்மைக்காலத்தில் வன்முறைகளும், படுகொலைகளும் அதிகரித்து வருகின்றன. படைத்தரப்பைப் பொறுத்தவரை இந்தப் படுகொலைகள் ஆக இரண்டே இரண்டு வகைப்பட்டவைதான்.

ஒன்று - படையினர் மீது தாக்குதல் நடத்த முயன்ற புலிகளைப் படையினர் சுட்டுக் கொல்லுதல்.

மற்றது - ஏனைய அனைவரும் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்கள்.

இந்த இரண்டு பட்டியல்கள்தான் படைத்தரப்பிடம் உள்ளன. எந்தக் கொலை நடந்தாலும் இந்த இரண்டில் ஒன்றில் அவற்றைச் சேர்த்து விடுவதுதான் படைத்தரப்பினதும் அவற்றின் ஊதுகுழல்களான அரச ஊடகங்களினதும், பெரும்பாலான சிங்கள ஊடகங்களினதும் வேலையும் போக்குமாகும்.

புலிகளால் மாமனிதர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டவர் அமரர் ஜோசப் பரராஜசிங்கம். அரச படைகளின் புலனாய்வுப் பிரிவும் அவற்றின் கீழ் இயங்கும் ஒட்டுப்படைகளுமே இப்படுகொலைக்குக் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவை, 'துரோகி ஒழிந்தான்' என்று விவரித்திருக்கிறது கருணா குழுவின் இணையத்தளம்.

அப்படியிருக்க, மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் மறைந்த சில மணி நேரத்துக்குள் அது குறித்து அறிக்கை வெளியிட்ட அரசின் கூட்டு நடவடிக்கைகள் தலைமைச் செயலகம், புலிகளே இப்படுகொலையைச் செய்தனர் என்று நாகூசாமல் தெரிவித்திருக்கிறது.

மன்னார் பேசாலையில், கிளைமோர்த் தாக்குதலில் 15 கடற்படையினர் பலியானதை அடுத்து, அப்பகுதியில் தேடுதல் நடத்தி அட்டகாசம், அடாவடித்தனம் புரிந்தனர் படையினர். அப்போது காணாமற்போன நான்கு பொதுமக்கள், படுகொலை செய்யப்பட்டு, எரியுண்டு, சாம்பலாகப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களது படுகொலைகளுக்கு சாட்சியம் இல்லை என்பதால் அவர்களையும் புலிகளே கொன்றனர் என்று பகிரங்கமாக சிங்கள ஊடகங்கள் அறிவிக்கின்றன.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் பழிவாங்கும் நடவடிக்கையாக ஓட்டோச் சாரதிகளான இரண்டு தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். அந்தக் கணக்கும் பொறுப்பும் கூட சிங்கள ஊடகங்களினால் புலிகள் மீதே சுமத்தப்படுகின்றன.

யாழ். நகரில் தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவையின் முக்கிய பிரமுகர் ஒருவர் நகரில் பத்திரிகைக் காரியாலயம் ஒன்றுக்கு முன்னால் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த மரணத்தைக்கூட படைத்தரப்பு திரித்துக் கூறியது. அரச ஊடகமான பத்திரிகை ஒன்றை விற்பனை செய்யும் ஒருவர் யாழ். நகரில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று செய்திகள் தெற்கில் வெளியிடப்பட்டன.

'செல்லும் செல்லாததெல்லாம் செட்டியார் கணக்கில்' என்பது போல தன்னுடைய கைவரிசை எல்லாவற்றையும் புலிகளின் கணக்கில் சேர்த்து விடுகிறது படைத்தரப்பு.

சிங்களப் பொதுமக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இப்படிக் காதில் பூ வைப்பது ஒரு விடயம். இதையும் தாண்டி, இந்தப் பூச்சுற்றலில் சிங்கள அரசுத் தலைமையே எடுபட்டுப் போவதுதான் - அவிந்து போவதுதான் - மிகமிக அபத்தமான நிலைமையாகும்.

இப்படித் தங்கள் கைவரிசைகளை எல்லாம் புலிகளின் தலையில் கட்டிவிட்டுக் கணக்குக் காட்டும் அரசுப்படைகளின் சதி நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் அரசுத் தலைமைக்குத் தெரிந்தே நடக்கின்ற கைங்கரியமா அல்லது அரசுத் தலைமைக்கே - புதிய ஜனாதிபதிக்கே - தெரியாமல் நடக்கும் கைவரிசையா என்பது இன்னும் தெளிவில்லை.

தமிழர் தரப்புக்கு எதிரான தங்களின் சதி, நாச வேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வசதியாக, அத்தகைய நாசவேலைகளுக்கான பொறுப்பைப் புலிகள் மீது சுமத்துவதன் மூலம் அரசுத் தலைமையையும் ஏமாற்றுவதற்கு அரச புலனாய்வுப் பிரிவினரும் அவர்களின் வழிகாட்டிகளும் முயல்கின்றனரோ என்பதும் தெரியவில்லை.

எப்படியானாலும், இவ்வாறு அபத்தமாகக் குற்றம் சுமத்துவதை உலகம் நம்பாது என்பது மட்டும் நிச்சயம்.

# நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைப்பு

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்களைச் சேர்க்கும் பொருட்டு நாளை புதன்கிழமை நடத்தப்படவிருந்த இலங்கை நிர்வாக சேவைப் (SLAS) போட்டிப் பரீட்சை திகதி குறிப்பிடப்படாது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அசாதாரண நிலைமை மற்றும் யாழ். மாவட்டத்திலிருந்து மேற்படி போட் டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாமை என்பன காரணமாகவே பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள மேற்படி பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - அவர் கூறினார்.

இதேவேளை - நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவிருந்த புள்ளிவிவரவியலாளர் ஆள்சேர்ப்புப் பரீட்சையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைகள் இரண்டும் யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-3-11)



புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி என்ற யுவதி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கனடாவிலுள்ள கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. நிகழ்வில் பெண்மணி ஒருவர் உரை நிகழ்த்துவதையும் படுகொலையைக் கண்டிக்கும் மகஜரில் கலந்துகொண்டோர் கையொப்பமிடுவதையும் படங்களில் காணலாம். (எ)

# ஜோசப்பைச் சுட்டவர்களை விரைவில் கைதுசெய்யலாம் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,டிசெ.27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை சுட்டுக்கொலை செய்த சந்தேக நபர்களைக் கைது செய்து விட முடியுமென்று உறுதியாகத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்றுமுன்தினம் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு உரையாடிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தச் சம்பவம் தனக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ஜோசப் எம்.பி. சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையும், அது தொடர்பில் இதுவரை கிடைத்துள்ள தகவல்களையும் பார்க்கும்போது இதன் சூத்திரதாரிகளை அடையாளம் கண்டுவிட முடியுமென அரசு கருதுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த உரையாடலின் போது தெரிவித்திருக்கிறாரெனக் கூறப்படுகிறது.

இது குறித்தான உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தன் எம்.பி.யிடம் உறுதியளித்திருக்கும் ஜனாதிபதி, ஜோசப் எம்.பியின் இறுதிக் கிரியைகளுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்யுமென்றும் கூறியிருக்கிறார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவுடன் தொலைபேசியில் உரையாடிய ஜனாதிபதி, ஜோசப் எம்.பி.யின் இறுதிக் கிரியைகளுக்கு செல்லத் தயாராகும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்குமாறு கேட்டிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள மட்டக்களப்புக்குச் செல்வதற்கு ஹெலிகொப்டர் வசதிகளைச் செய்து கொடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பமைச்சின் செயலாளரைப் பணித்திருகின்றார். (கு)

# யுவதி, இரு இளைஞர்களின் உடல்களை பொறுப்பேற்கக் கோருகின்றது ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ்.ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு யுவதியினதும் இரண்டு இளைஞர்களினதும் சடலங்களை அடையாளம் கண்டு பொறுப்பேற்குமாறு யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் உறவினர்களைக் கேட்டிருக்கிறது.

யாழ்.கோட்டைப் பகுதியில் கடந்த சனியன்று மாலை சுட்டுக்கொல்லப்பட்ட ஐவரில் மூவரின் சடலங்களே இவையாகும். இந்த மூன்று சடலங்களும் இன்னமும் இனம் காணப்படவில்லை.

சடலங்களின் அடையாளங்களை யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் வெளியிட்டிருக்கின்றது அவை வருமாறு-

பெண்- நீல டெனிம், நீல சேர்ட், வயது அண்ணளவாக 25.

ஆண் 1- நீல டெனிம் ,நீல சேர்ட் வயது அண்ணளவாக - 24.

ஆண்2-கறுப்பு ரவுசர்,பிறவுண் ரீசேட், கையில் வெள்ளி சங்கிலி,வயது அண்ணளவாக-25.

(ஐ-15)

# வெற்றுக்காணிகளிலுள்ள பற்றைகளை அகற்றுமாறு படையினர் அறிவுறுத்து

அரியாலை,டிசெ. 27

வீதியோரங்களில் வெற்றுக்காணிகளிலும் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகளை வெட்டி துப்புரவு செய்யுமாறு படையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

படையினரின் இந்த அறிவுறுத்தலை அடுத்து பருத்தித்துறை வீதியில் இருபாலை, கோப்பாய், நீர்வேலி பகுதியில் வீதியோரங்களில் வெற்றுக் காணியில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகளை வெட்டி அழிக்கும் பணியில் பொது மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் வீதியோரங்களில் அடர்ந்து வளர்ந்திருக்கும் மரக் கொப்புக்களையும் மக்கள் வெட்டி அகற்றி வருகின்றனர்.

பிரதான வீதியோரமாகவுள்ள வீடுகளில் வளர்ந்திருக்கும் மரக்கிளைகளை அகற்றுமாறு படையினர் ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கியிருந்தமை தெரிந்ததே. (எ-17)

# இப்படியும் நடக்கிறது

வலி.கிழக்கு,டிசெ.27

இராணுவத்தினரைக் கண்டு அஞ்சி ஓடி வருபவர் போன்று பாசாங்கு செய்து கொண்டு வீடு ஒன்றினுள் புகுந்த நபர் ஒருவர் அங்கிருந்தவரை ஏமாற்றி அழைத்துச் சென்று வழியில் அவரைத் தாக்கி தங்க நகைகளை அபகரித்துக் கொண்டு தலைமறைவானார்.

கடந்த சனியன்று முன்னிரவு கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

வீட்டினுள் நுழைந்த நபர் இராணுவம் வருவதாகக் கூறி அடைக்கலம் கேட்டுள்ளார். வீட்டில் இருந்த ஓய்வு பெற்ற அரச அலுவலர் அவர் மீது இரங்கி இடம் கொடுத்திருக்கிறார். லாவகமாகப் பேசிய அந்த நபர் முதலில் கைத் தொலைபேசி ஒன்றைத் திருடியுள்ளார். பின்னர் தனக்கு வழிகாட்டுமாறு கூறி வீட்டுக்காரரை தம்மோடு அழைத்துக் கொண்டு சென்றுள்ளார். வழியில் திடீரென வீட்டுக்காரரை பலமாகத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த தங்க மோதிரம், சங்கிலி என்பனவற்றை அபகரித்துக் கொண்டு அந்த நபர் தப்பி ஓடிவிட்டார். பலமாக தாக்கப்பட்ட வீட்டுக்காரர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-180)

# ஜோசப் எம்.பியின் படுகொலையை கண்டிக்கிறது இந்து மாமன்றம்

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையை அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுவிடயமாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:-

வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வேளையில் அங்கு படுகொலைகளும் தொடர்வது மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

வடக்கு - கிழக்கில் உடனடியாக இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்களைப் பயங்கரவாதிகளாக முத்திரையிட்டு துன்புறுத்தப்படுவதும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

புங்குடுதீவில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்ட துர்ப்பாக்கிய நிலை வடக்கு - கிழக்கில் பலர் கொலை செய்யப்படுகிற கொடூரம் இராணுவம் அங்கு குவிக்கப்படுவது எல்லாம் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டுச் செய்யப்படும் அரசினதும் அரச படையினரதும் இனத்துவேச நடவடிக்கையாகவே தென்படுகிறன.

சகல வன்முறைகளையும் கண்டிக்கும் அதேவேளை - நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொடூரமாக கொலைசெய்யப்பட்டமையை எமது மன்றம் கண்டிக்கின்றது. (எ)

## நாளை

மார்கழி 13
புதன்கிழமை
28.12.2005
திதி: துவாதசி
பிற்பகல்: 1.19 வரை
நட்சத்திரம் : விசாகம்
காலை : 07.27 வரை
சுபநேரம் : 04.58 - 06.28
ராகுகாலம் : 12.28 - 01.58
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

போலியான நண்பர்களை விட வெளிப்படையான எதிரியே மேல்.
-ஓர் அறிஞர்.

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

எமது சபையினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளிகளுக்கு ஆங்கிலத்தைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியை தேவை. தகுதிக் கேற்ப ரூ.5000இற்கு குறையாத மாத வேதனம் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க விரும்புவோர்**
தகைமைச் சான்றிதழ், நற்சாட்சிப் பத்திரங்களுடன் 01-01-2006(ஞாயிறு) காலை 9.30 மணிக்கு பின்வரும் முகவரியில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவும்.

ஞானவைரவர் சுவாமி
கோயில் மண்டபம்,
கோப்பாய் வீதி, உரும்பிராய்.

தலைவர்
தர்மகர்த்தாசபை.

(சி/47069)(26-16-17)


எங்கள் அன்புத் தெய்வத்திற்கு

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20.09.1947

மறைவு
07.01.2005



### அமரர் இந்திராதேவி கழுகாசலம்

*ஆண்டுகள் பல தனியொரு கலங்கரை விளக்காய்*
*மைந்தர்களை வழிகாட்டி ஆளாக்கிய அன்னையே!*
*இத்தரணியில் அவர்கள் காலூன்றித் தடம் பதிக்கும்*
*வேளையில் பயன்காணாது விழிமூடியது ஏனோ!!*

புலோலி,
வட.கிழக்கு,
பருத்தித்துறை.

என்றும் உங்கள் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள், தாய்,
சகோதரங்கள், உறவினர்கள்.

W.W.W.uthayan.com

(44639) (39-26-16-17)


## 2005 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறி

**Diploma in Visualize Management**
Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document management, Print Spooling & job management through MS WORD, Creating and delivering presentation through MS POWERPOINT, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS EXCEL.



புதிய பிரிவு ஆரம்பம் 01.01.2006

காலம்: 3மாதங்கள்

| | |
|---|---|
| கட்டணம் | ~~2500/=~~ |
| சலுகைக் கட்டணம் | 1250/= |

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170
0777846811



## SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள்2006
## ஆரம்பம் 02,07.01.2006

Special Offer 2000/=

Free Registrations

கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | Duration 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | Duration 4-5 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | Duration 5 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | Duration 6 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | Duration 2 Months |

- குறைந்த கட்டணம்
- அங்கீகாரமுள்ள சான்றிதழ்
- இலவசப் பாடநூல்
- வரையறையற்ற செய்முறை

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170,
0777846811


## ஆனைக்கோட்டையில் வியாழனன்று வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், டிசெ.27

ஆனைக்கோட்டை பொதுசுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை ஏ.ஆர்.வி.தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் பின்வரும் இடங்களுக்கு அவற்றைக் கொண்டுவந்து தடுப்புமருந்தை ஏற்றுமாறு பொது சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் காலை 9 மணி- பிடாரி அம்மன் கோயிலடி, முற்பகல் 10.30 மணி- 4 ஆம் கட்டை, தியாகசீலம் அருகில், நண்பகல் ஒரு மணி- முள்ளி ஆரம்ப சுகாதார நிலையம், பிற்பகல் 2.30 மணி-நவாலி-சென்பீற்றர்ஸ் தேவாலயம் அருகில். (3-203)

## வடமராட்சியில் புகையிலைச் செய்கை ஆரம்பம்

வடமராட்சி, டிசெ.27

வடமராட்சிப் பிரதேசத்தில் தற்போது விவசாயிகள் புகையிலைச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தலா 2 ரூபாவீதம் புகையிலை நாற்றைக் கொள்வனவு செய்யும் விவசாயிகள் அவற்றை நடுகை செய்து வருகின்றனர். (எ-173-203)

## கவிதை, கட்டுரை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.2‹

யாழ்.மறைமாவட்ட பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு மறை மாவட்ட பொது நிலையினர் சபையால் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**கட்டுரை** - எஸ்.யேசுநாயகம் (கரவெட்டி), அ.பிறின்சி (நாவாந்துறை), ச.மேரி அன்ரனிற்றா (முழங்காவில்).

**கவிதை**- பா.வேதநாயகம் (பருத்தித்துறை), என்.எம்.பாலச்சந்திரன் (நாவாந்துறை), ப.மேரி ஆன் றோசாறிஸ் (பருத்தித்துறை). (எ-203)

## மந்திகையில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வடமராட்சி,டிசெ.27

மந்திகைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் அப்பகுதியில் உள்ள வீதிகளால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே உரியவர்கள் இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (எ-173-203)

## சிரமதானம் மூலம் நன்னீர்க் கிணறு துப்புரவு

நவாலி,டிசெ.27

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தினர், ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்திலுள்ள நல்ல தண்ணீர்க் கிணற்றையும் அதன் சுற்றாடலையும் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்துள்ளனர் (எ-100)

## விசவத்தனை ஆலயத்தில் விநாயகர் விரத வழிபாடு

சுழிபுரம், டிசெ.27

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் விநாயகர் விரத பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

தினமும் காலை 6.30 மணி தொடக்கம் விநாயகருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று தொடர்ந்து விநாயகர் அகவல் ஓதல் நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

எதிர்வரும் 4ஆம் திகதி வரை இந்த வழிபாடு நடைபெறவுள்ளது.

(எ-38-203)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.27

மானிப்பாய் யுசிமாஸ் நிலையத்தின் பரிசளிப்பு விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் நவோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யுசிமாஸ் நிலைய ஆசிரியை திருமதி ஜி.கருணா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளைப் பொறுப்பாளர் எஸ்.ஜனகேஸ்வரன் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக மெமோறியல் நவோதயா கல்லூரி அதிபர் வேணுகா சண்முகநாதன், சோதி வேம்படி அதிபர் ரி.அருள்பிரகாச பிள்ளை, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.ராமலிங்கம், போதகர் சாம் ராஜசூரியர் ஆகியோர் கலந்துகொள்வர். (3-204)

## மரண அறிவித்தல்கள்



*திருமதி*

### செல்லத்துரை பாக்கியம்

அராலியைப் பிறப்பிடமாகவும் சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாக்கியம் நேற்றுமுன்தினம் (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாரிமுத்து - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுகுமாரன் (லண்டன்), சுசீலா, சந்திரவதனா, விஜியகுமாரன் (கொழும்பு), கோகுலவத்னி (லண்டன்), இரத்தினகுமாரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் பிரபாவதி (லண்டன்), ஆனந்தராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), யோகராஜா (ராஜன் ஒலிப்பதிவுக்கூடம்), அன்னபாக்கியம் (கொழும்பு), ரகுராஜ் (லண்டன்), அம்பிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், தியாகராஜா மற்றும் தங்கம்மா ஆகியோரின் சகோதரியும் வள்ளியம்மை (கனடா), ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் சஞ்சீவன், சுதாகரன் சர்மிளா, சோதிபாலன் சியாமளா, சிவரூபன் றசிகலா, ஹம்சலா, ராஜ்குமார் லாவண்ஜா, ஸ்ரீகோணேஸ், கோணேஸ்வரன் சுதர்சினி, ஜனார்த்தனி, ஜனார்த்தனை, சுகந்தன், வினோத், றதீஸ், பகீரா, சுஜான், கிஷான், அனோஷ், அவினிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சோஜினி, கஜானன், யாழினி, விபூஷன், அபிலாஷ், நிரூஜன், சௌமியா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் வீதி,
சித்தன்கேணி.

தகவல்:
*ந.ஆனந்தராஜா (பேவி).*

(சி-47068)(26-16-17)

### *பஞ்சரத்தினம் நிர்மலராணி*

மணியகாரன் வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல.366, கச்சேரி-நல்லூர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சரத்தினம் நிர்மலராணி அவர்கள் நேற்று (26.12.2005) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆ.சு.பஞ்சரத்தினம் (பிரதேச செயலகம், உடுவில்) அவர்களின் அன்பு மனைவியும் வித்யா (வேம்படி மகளிர் கல்லூரி) வின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணர்- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆ.சுப்பையா-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் இந்திராணி (பிரதேச செயலகம், நல்லூர்), இராஜசேகரன் (வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), சந்திரசேகரன் (சைவப்பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை), ஞானசேகரன், இரஞ்சிதராணி, சிவபாலசேகரன் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), விஜயராணி (செ.மி.த.க.பாடசாலை, தம்பசிட்டி), தேவிகாராணி (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), உதயசேகரன், சர்மிளா (வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2005) செவ்வாய்க்கிழமை கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியில் உள்ள இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் :
ஆ.சு.பஞ்சரத்தினம் (கணவர்).

(44641)(26-16-17)



*திருமதி*

### *நல்லம்மா கந்தசாமி*

மட்டுவில் தெற்கு, மருதங்குளம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா - கந்தசாமி அவர்கள் நேற்று (26-12-2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசி தம்பதியரின் புதல்வியும் தெல்லிப்பழையைச் சேர்ந்த அமரர் இளையவி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற அமரர் இ.கந்தசாமியின் துணைவியாரும் தவராஜா (சுவிஸ்), ஜெயவதி ஆகியோரின் பாசமிகு தாயும் செ.லோகநாதன் அவர்களின் மாமியும் காலஞ்சென்ற அன்னமுத்து, தருமலிங்கம் மற்றும் சண்முகம், இராசம்மா, தங்கம்மா (சுவிஸ்), சிவசம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வைரவன், மார்க்கண்டு, அன்னம்மா மற்றும் சிவகுரு, கனகம்மா, புனிதவதி, சிவக்கொழுந்து, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் பிரவீன், மதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-12-2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சின்னத்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல் :
*செ.லோகநாதன்*
*(சாந்தன்-மருமகன்,)*

(44643)(26-16-17)

# பணிப் புறக்கணிப்பால் அரச திணைக்களங்கள் செயலிழப்பு





மாவட்டச் செயலகம்



யாழ். கல்வி வலயம்





பல்கலை வளாகம்



படங்கள் : பிரபா, பிரியன்,நேசன்

### ஊரடங்கு உத்தரவு இல்லை! படையினர் தம் இஷ்டப்படி தாக்குதல்

# இரவில் நடமாடுவோர் சுடப்படுகின்றனர் அவசிய தேவைகளுக்காக வெளியேவர மக்கள் அச்சம்!

யாழ்ப்பாணம்,டிசெ.27

இரவில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் வெளியில் நடமாடும் பொதுமக்கள் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்து வருகின்றனர். அச்சுவேலியிலும், புன்னாலைக் கட்டுவன் பகுதியிலும் அப்பாவிப் பொதுமக்கள் மூவர் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். பாதுகாப்புத் தரப்பிலிருந்து உரிய அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்படாததால் வழமைபோன்று வீதிகளில் நடமாடுவோர் சுடப்படும் ஆபத்து உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இரவில் நடமாடுவது தொடர்பாக பொலீஸ் தரப்பில் எந்தவித விளக்கங்களும் இதுவரை வழங்கப்படவில்லை. கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்படாத நிலையில் இரவு நேரத்தில் அவசிய தேவைகளுக்காகப் பலரும் வெளியே நடமாட முற்படுகின்றனர். இவர்கள் காவல் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரால் தாக்கப்படு கின்றனர்.

சுகவீனமடைந்த தங்கள் குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்த பெற்றோர்கள் நீர்வேலி, கரந்தன் பகுதியில் படையினரின் சூட்டுக்கு இலக்காகியது தெரிந்ததே. இந்தச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலை உருவாகியுள்ளது.

ஊரடங்கு போன்ற அறிவிப்புகளை வழங்காமல் இரவில் நடமாடுவோர் மீது கண்டபடி சூடு நடத்துவது தடுக்கப்பட வேண்டும் என்றும் இதுகுறித்து பொலீஸ் அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டு அறிவுறுத்தல்களை வழங்கி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-7-12)

# சுனாமி முதலாம் ஆண்டு நினைவாக புனரமைக்கப்பட்ட சிகிச்சை நிலையங்கள் மந்திகையில் சனியன்று திறப்பு

ஆழிப்பேரலை அனர்த்த முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு போர்த்துக்கீசரின் சுகாதார நிறுவனத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட நவீன அவசர சிகிச்சைப் பிரிவும் நவீன வசதிகள் கொண்ட பிரசவ சிகிச்சை நிலையமும் (பிரசவ அறை) கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டன.

5 மில்லியன் ரூபா செலவில் இவை புனரமைக்கப்பட்டிருந்தன.

அதிதீவிர சிகிச்சைப்பிரிவை ஏ.எஸ்.ஈ. போர்த்துக்கீசரின் சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த அன்டிரா அனாரிபேராவும்

பிரசவ சிகிச்சை நிலையத்தை திருமதி அனாமரியா ரிவேராசும் திறந்து வைத்தனர். இதற்கு முன்னதாக பயிற்சியை முடித்துக் கொண்ட பயிற்சியாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பதில் வைத்தியப் பொறுப்பதிகாரி மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் கே.குழந்தைவடிவேல் தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பலியானோருக்கு இரண்டுநிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன், ஏ.எஸ்.ஈ. போர்த்துக்கீசரின் சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த அன்டினா அனாரிபேரா, யாழ் பிராந்திய மலேரியாத் தடுப்பு வைத்திய பணிப்பாளர் டாக்டர் கே.எஸ்.சிவபாதம், வைத்திய சாலை அபிவிருத்திச் சபை செயலாளர் கே.ஜீ.தங்கவேல், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய பொறுப்பாளர் டாக்டர் கே.மயிலேறும்பெருமாள், வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர். பல் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஜெயராஜா நன்றி தெரிவித்துப் பேசினார்.

இந்நிகழ்வின் இறுதியில் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் ஆழிப்பேரலை அனர்த்தத்திட்டத்தின் கீழ் இவ்வைத்தியசாலைக்கென போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்றை பதில் வைத்திய பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தார்.

அத்துடன் , அடுத்த புதிய ஆண்டுக்குள் (2006) யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளவுள்ள சுகாதார வைத்திய திட்டங்கள் குறித்த விவரங்கள் வீடியோ மூலம் யாழ் பிராந்திய சுகாதார பணிப்பாளரால் காண்பிக்கப்பட்டன. (எ-173)

## புனரமைப்புப் பணியை நிறைவுசெய்ய உதவியோருக்கு நினைவுக் கேடயங்கள்

வடமராட்சி,டிசெ.27

சர்வதேச தொண்டு நிறுவனங்களின் ஆழிப்பேரலை அனர்த்த உதவித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று சிகிச்சை நிலையம் ஆகியவற்றை குறுகிய காலத்தில் புனரமைப்புச் செய்து வழங்கியமையைப் பாராட்டி ஏ.எஸ்.ஈ. போர்த்துக்கீசர் சுகாதார நிறுவனத்துக்கும் அதன் இணைப்பாளர் அன்டிரா ரெபேரோ தம்பதிகளுக்கும் நினைவுக் கேடயங்கள் வழங்கப்பட்டன.

மேற்படி வைத்தியசாலையில் நடைபெற்ற இவற்றின் திறப்புவிழாவின் போது யாழ். பிராந்திய சுகதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன், நிறுவனத்துக்கான நினைவுக் கேடயத்தை அன்டிரா ரெபேரோவிடமும் -

அன்டிரா ரெபெரோ தம்பதிகளுக்கான நினைவுக் கேடயத்தை வைத்தியசாலை அபிவிருத்திச் செயலாளர் வி.ஜி.தங்கவேலும் கையளித்தனர். (எ-113)

## நவாலி கிழக்கில் வெள்ள நிவாரணம் கிடைக்கவில்லையாம்

நவாலி,டிசெ.27

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவில் வெள்ளத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை எவ்வித உதவிப் பொருள்களும் வழங்கப்படவில்லையென்று மக்கள் புகார் செய்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மற்றொரு பகுதியினருக்கு இவை வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வீடு வீடாகச் சென்று பாதிக்கப்பட்ட 44 குடும்பங்களின் விவரங்களைப் பெற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர். (3-100)





கடந்த சனிக்கிழமை மாலை யாழ். கோட்டைப் பகுதியில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமகன் ஒருவரின் சடலம் படையினரின் தீவிரபாதுகாப்பின் மத்தியில் ஆஸ்பத்திரியில் இருந்து எடுத்துச்செல்லப்படுவதையும் ஆஸ்பத்திரி வளாகத்தில் உயிரிழந்தவரின் உறவினர்கள் கூடிநிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா)

## ஆனைக்கோட்டையில் வீதிப் பெயர்ப்பலகைகள்

ஆனைக்கோட்டையில் இருந்து காக்கை தீவு செல்லும் வீதி, சம்மந்தப் பிள்ளையார் வீதி என்பவற்றிற்கு வீதிப் பெயர்ப்பலகைகள் நடப்பட்டுள்ளன. அப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான சொக்கலிங்கம் துரைராஜாவின் முதலாம் ஆண்டு நினைவாக இவை அமைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

(எ-100)

## வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு பளையில் விடுதிகள்

வெளிமாவட்டங்களிலிருந்து வந்து பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென விடுதிகளை அமைக்க கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பளை மத்திய கல்லூரி வளவில் இதற்கென தலா எட்டு அறைகள் கொண்ட இரு கட்டடங்கள் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளை கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் விடுதி வசதி இல்லாததால் எதிர்நோக்கும் சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு விடுதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கபடவுள்ளன என்றும் தூர இடங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் இந்த விடுதிகளில் தங்கி தமது பாடசாலைகளுக்குச் செல்வதற்காகவே விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது.

(எ-117)

**UNIVAC**

**Software Engineering Park**

2006 ஆம் ஆண்டில் 1000 கணனி மென்பொருள் பொறியியலாளரில் நீங்களும் ஒருவராக வர

**இன்றே விண்ணப்பியுங்கள்**

**யுனிவெக் போட்டிப்பரீட்சை**

விண்ணப்ப முடிவு திகதி 31-12-2005

213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P : 077 6176476

(சி-47042)

**S.L.A.S வழிகாட்டல் நூல்**

தொகுப்பு : த.தவசேகர்

- துறைசார் கட்டுரைகள்
- சுருக்கம் எழுதும் முறை

**D.M.I** யாழ்நகர், கிறிஸ்டல் நெல்லியடி, சுப்ரா சித்தங்கேணி மற்றும் புத்தக நிலையங்களில் கிடைக்கும்.

(44626)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சதாசிவம் சின்னையா

(அதிபர் - சின்னையா இரும்புத் தொழிலகம்)

**ஆண்டு இரண்டு சென்றதுவோ**
**ஐயாவே உமைப்பிரிந்து...**
**நித்தம் உமை நினைக்கின்றோம்**
**உமது வழியைப் பின்தொடர்வோம்.**

*தகவல்;*

சு.பரஞ்சோதி, (பெறாமகன்),
சி.கலைச்செல்வன் (மகன்),
சி.திருவருட்செல்வன் (மகன்),
திருமதி லதா ரவீந்திரன் (மகள்)

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*

(44634) (21.11.17)

## நெஞ்சை விட்டகலா 31ஆம் நாள் நினைவு

ஊக்கமாய் மண்ணில் 12 - 03 - 1956



தேக்கமாய் நெஞ்சில் 27 - 11 - 2005

### அமரர் ஆழ்வார்-இராமநாதன்

(ஆசிரியர்-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

*கள்ளம் கபடமில்லா உள்ளத்துடன்*
*அன்புதனை எமக்கூட்டி*
*ஆதரவாய் அணைத்து நின்றீர்*
*வகுப்பாசிரியராய் மட்டுமல்ல*
*தந்தையாகவும் நின்று எமைக்காத்த*
*உத்தமரே! உமை இழந்து*
*இன்று ஊமையாகி நிற்கின்றோம்*
*எம் கல்வி வளர்ச்சிக்காய்*
*உமையே நீர் அர்ப்பணித்த*
*உத்தம தன்மையினை*
*உவப்புடன் போற்றுவதற்கு*
*இன்று நீர் இங்கு இல்லையே*
*எண்ணியே ஏங்க வைத்து*
*விண்ணிடை சென்றதென்ன*
*விடைபகர யாரெமக் குளரோ...*

**2002 வர்த்தகபிரிவு மாணவிகள்.**
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(44505)(21.11.17)

**IIS COMPUTER COURSES**

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

**01.01.2006** அன்று பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் பதிவுக்கட்டணத்தில் **50%** கட்டணச்சலுகை வழங்கப்படும்

**New Batches Start on**

Batch 1 [Weekend] : 01.01.2006
Batch 2 [Weekday] : 03.01.2006
Batch 3 [Weekday] : 11.01.2006
Batch 4 [Weekend] : 14.01.2006
at 10.00 A.M.

| பயிற்சி நெறிகள் | | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | | ~~4800/=~~ | 2000/= |
| Diploma in Desk Top Publishing | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Internet Technology | | ~~6000/=~~ | 3000/= |
| Diploma in Hardware Technology | | ~~7000/=~~ | 3000/= |
| Diploma in Computer Programming | | ~~10000/=~~ | 6000/= |
| PageMaker | CorelDRAW | ~~1500/=~~ | 1000/= |
| Flash | Photosbop | | |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க **IIS** நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
#100, Clock Tower Road, Jaffna
T.P.No. : 021 222 2831
Email : iiscc@sltnet.lk

**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

**2008 A/L**

**கணித, உயிரியல் பிரிவு**

*எமது வழமையான ஆசிரியர் குழு*

**ஆரம்பம்: 01.01.2006**

**ஞாயிறு காலை 9 மணி.**

(44628) (21.11.17)

## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

### மணல் விநியோக அறிவித்தல்

- வருட இறுதியில் ஒப்பந்தகாரரின் வேலை நெருக்கடியை கருத்தில் கொண்டு செவ்வாய், புதன் கிழமைகள் (27.12., 28.12ஆம் திகதிகள்) அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒப்பந்தகாரர்களுக்கு மணல் விநியோகிக்கப்படும். வீட்டுத்திட்டங்களுக்கான மணல் விநியோகம் தை மாதத்தில் (02.01.2006, 03.01.2006, 04.01.2006) திங்கள், செவ்வாய், புதன் கிழமைகள் நடைபெறும்.

**உலகவங்கி, சுனாமி, எம்.ஆர்.ஆர்.ஆர், யு.என்.எச்.சி.ஆர்.** ஆகிய வீட்டுத் திட்டங்களுக்கு மணல் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் திங்கள், செவ்வாய், புதன் குறிப்பிடப்படும் மணல் அனுமதிப்பத்திரங்களுக்கு ஒரு வாரம் ஒப்பந்தகாரர்களுக்கும், அடுத்த வாரம் வீட்டுத் திட்டங்களுக்குமென விநியோகம் ஒன்று விட்டு ஒரு கிழமை என்கின்ற முறையிலேயே மேற்கொள்ளப்படுமென்பதை அறியத்தருகின்றோம். வீட்டுத்திட்டங்களுக்கான மணல் விநியோகம் குறைவடைந்த பின் மீண்டும் ஒவ்வொரு கிழமையும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதையும் தெரியத் தருகின்றோம்.

**- நிர்வாகம்.**

(சி-47066)(21.11.17)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று- கிளிநொச்சி

வழ.இல : 187/05
தன்மை : விவாகரத்து

*வழக்காளி*
சோனையன் சத்தியதேவன்
இல:244,
மாயவனூர்,
வட்டக்கச்சி.

*எதிராளி*
சத்தியதேவன் சுசீலா
பள்ளத்தோட்டம்,
3ஆம் கட்டை,
திருகோணமலை.

### இடைக்காலத் தீர்வை

மேற்படி வழக்கின் எதிராளிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதுடன் 20.09.2005 இல் பத்திரிகையில் பிரசுரமும் செய்யப்பட்டது. எனினும் குறித்த அறிவித்தலின் பிரகாரம் எதிராளி மன்றில் தோன்றாத நிலையில் மாவட்ட மன்று இவ்வழக்கினை ஒருமுகவிளக்கத்திற்குத் தீர்மானித்தது.

இதன்படி 2005ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் 20ஆம் நாள் வழக்காளியும் அவர் தரப்பு சட்டவாளர் திரு.ரி.எஸ். வேலவர் அவர்களும் மன்றில் சமுகமாயிருக்க மாவட்ட நீதியாளர் செல்வி சி.சாதனா அவர்கள் முகதாவில் ஒருமுகவிளக்கத்திற்கு எடுக்கப்பட்டு, 28.04.1989இல் வழக்காளியும் எதிராளியும் செய்து கொண்ட பதிவுத் திருமணத்தை இரத்துச்செய்தும் எதிராளியின் பிள்ளைகளை பராமரிக்கும் உரிமை வழக்காளிக்கு உண்டென்பதையும் வழக்காளிக்கு ஏற்பட்ட வழக்குச் செலவை எதிராளி செலுத்த வேண்டும் எனவும் வெளிப்படுத்தி ஒருமுகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதன்படி இடைக்காலத்தீர்வை பதியப்படுகின்றது.

வரைவு:. **ரி.எஸ். வேலவர்,**
**வழக்காளியின் சட்டத்தரணி,**
**வேள்ட்விசன் ஒழுங்கை,**
**கண்டி வீதி,**
**கிளிநொச்சி.**

செல்வி சி.சாதனா ,
*நீதியாளர்,*
*தமிழீழ மாவட்ட நீதிமன்று,*
*கிளிநொச்சி.*

(444621)(21.17.11)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று- கிளிநொச்சி

வழ. இல. :-187/05,
தன்மை :-விவாகரத்து,

வழக்காளி:-
சோனையன் சத்தியதேவன்,
இல: 244,
மாயவனூர், வட்டக்கச்சி.

எதிராளி:-
சத்தியதேவன் சுசீலா,
பள்ளத்தோட்டம்,
3ஆம் கட்டை, திருகோணமலை.

### பகிரங்க அறிவித்தல்

இதனுடன் பிரசுரிக்கப்பட்ட இவ்வழக்கின் இடைக்காலத் தீர்வை தொடர்பில் ஆட்சேபனை எதுவும் இருப்பின் எதிராளியோ, அவர் சார்பில் அக்கறையுடைய எவருமோ தமது ஆட்சேபனையை இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 21 நாள்களுக்குள் இம்மன்றில் தோன்றி தெரிவிக்கத் தவறும் பட்சத்தில் இந்த இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**"மன்றின் கட்டளைப்படி"**

வரைவு:- ரி.எஸ்.வேலவர்,
*வழக்காளி சட்டத்தரணி,*
*வேள்ட்விசன் ஒழுங்கை,*
*கண்டிவீதி, கிளிநொச்சி.*

செ.மாணிக்கராசா,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(44622)(21.11.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது ச.ச நிலையத்தைச் சேர்ந்த
**சூரியப்பிரகாசம், சந்திரப்பிரகாசம்**
ஆகியோரின் பாசமிகு தாயார்

### திருமதி ஜயவீரசிங்கம் இலட்சுமிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- குரும்பைகட்டி சனசமூக நிலையம்.**

(சி-47067) (21.11.17)

# மீண்டும் எம்மால் ஒருமுறை இடம்பெயரமுடியாது; இடைத்தங்கல் முகாம் வாழ்வும் போதும்!

**ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் ஒருவருடம் பூர்த்தியாகியது. வருடம் ஒன்று கழிந்த நிலையில் வடமராட்சியில் ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் வசிக்கும் மக்களின் வாழ்வு நிலை எவ்வாறு உள்ளது என்று 'உதயன்' கள ஆய்வை மேற்கொண்டான் அப்போது உரைத்தவை இவை.**



**பயஸ் லோகதாஸ்**
(வலி.வடக்கு, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர்)

அரசாங்கத்தால் எமது மக்களுக்கு ஏனைய மாவட்டங்களில் வழங்கப்படுவது போன்ற உதவிகள் எவையும் கிடைக்கவில்லை. ஆழிப்பேரலை நிவாரண முத்திரை, 5,000 ரூபா கொடுப்பனவு இவ்வளவும் தான் வழங்கப்பட்டன. அதுதவிர கடற்றொழில் திணைக்களத்தினூடாக 40 வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிப்படைந்த மக்களுக்கு பல்வேறு உதவிகளை பல வடிவங்களில் செய்து தந்துள்ளன. குறிப்பாக கியூமெடிக்கா நிறுவனம் அழிந்த படகுகளுக்குப் பதிலாக 197 படகுகளை எமது சமாசத்திற்கு வழங்கியுள்ளது. அதேபோல அலன்ஸ் நிறுவனமும் 25 படகுகளைத் தந்துள்ளது. போரூட் நிறுவனம் 40 கட்டுமரங்களைக் கொடுத்துள்ளது. இதன்மூலம் எமது குடும்பங்கள் ஓரளவு தமது தொழில் முயற்சியை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

அதேநேரம், கியூடெக் -கரித்தாஸ் நிறுவனம் சுமார் 50 தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. தமது சொந்த மண்ணில் பல்வேறு வசதிகளுடன் வாழ்ந்த எமது பகுதி மக்கள் தற்போது தற்காலிக வீடுகளில் பல்வேறு கஷ்ரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதனைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது. தற்போது கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ள போதும் அப்பகுதியிலுள்ள இராணுவத்தினரின் கெடுபிடியால்

## நிவாரணமாக வழங்கப்படும் பொருள்கள் தரக்குறைவாகக் கிடைப்பதும் உண்டு


தற்காலிக வீடு நிரந்தர வீடு

கடலுக்குச் செல்ல மீனவர்கள் அச்சப்படுகின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் இருந்து மீட்சியடைந்த மக்கள் இராணுவம் என்ற அடுத்த சுனாமிக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மக்கள் இரவு நேரங்களில் கரைக்குத் திரும்ப முடியாமல் இருக்கிறார்கள். எனவே, எமது மக்கள் சுதந்திரமான தொழில் நடவடிக்கையில்

**நேர்காணல்: வல்லழகனார் - வசந்தன்
படங்கள்: சி.சுந்தரலிங்கம்**

ஈடுபட சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆழிப்பேரலை நிவாரணம் என்ற போர்வையில் ஒரு நபருக்கு 300 ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்படுகின்றன. அதன் மூலம் எமக்கு வேண்டிய சகல பொருள்களையும் நாம் சங்கக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், சங்கங்களால் வழங்கப்படும் பொருள்கள் சில இடையிடையே தரக்குறைவானவையாகக் காணப்படுகின்றன. இதனால், அவற்றை வாங்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக அவர்கள் தலைமைப்பீடத்திடம் முறைப்பாடு செய்தும் எந்தப் பயனுமில்லை.

அரசினால் நிரந்தர வீடுகள் கட்டித்தாறம் என்று கூறப்பட்டாலும் இன்றுவரை அது செய்யப்படவில்லை. எமக்கென சொந்தக் காணி இல்லை. அதனால், அத்திட்டம் நடைமுறைக்கு வந்தாலும் அது எமக்குக் கிடைக்காது என்று நினைக்கிறார்.

எமக்குரிய நிரந்தரக் காணிகள் எமது சொந்த இடமான வலிகாமம் வடக்கில் உள்ளது. அங்கு எங்களை மீளக் குடியமர அனுமதித்து நிரந்தர வீடுகளைக் கட்டித்தர வேண்டும். இல்லாது விட்டால் நாம் இருக்கிற பகுதியில் அரசு காணிகளை வாங்கித் தமது செலவில் வீடுகளைக் கட்டித்தரவேண்டும். அப்பொழுதுதான் பல இழப்புகளைச் சந்தித்த எங்களுக்கு பெரும் ஆறுதலாக இருக்கும்.



**அந்தோனிமுத்து மேரிறோஸ்**
(குடும்பப்பெண்- சேந்தான் குளம், இடைத்தங்கல் முகாம்)

மீண்டும் ஒருமுறை எங்களால் இடம்பெயர முடியாது. எமது சொந்த மண்ணில் மீளக்குடியமர அனுமதியுங்கோ.

எமது சொந்த இடம் வலி.வடக்கு. கடந்த கால யுத்தத்தினால் இடம்பெயர்ந்து சக்கோட்டைப் பகுதியில் வசித்துவந்த எம்மை கடந்த வருட இறுதியில் வந்த ஆழிப்பேரலை என்ற பேய் மீண்டும் இடம்பெயர வைத்தது. ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து தற்போது சக்கோட்டையில் இருக்கும் சேந்தான்குளம் இடைத்தங்கல் முகாமில் வசிக்கின்றோம். தற்போது நாம் இருக்கும் தற்காலிக வீடுகளும் அண்மையில் பெய்த கடும்மழையால் நீரில் மூழ்கின. இதனால், நாம் மீண்டும் ஒரு இடப்பெயர்வுக்கு ஆளாக நேர்ந்தது. தொடர்ந்து எம்மால் இடம்பெயர முடியாது. எமது சொந்த மண்ணில் மீளக்குடியமர்ந்து நிம்மதிப் பெருமூச்சு விடவே நாம் விரும்புகின்றோம்.

ஆழிப்பேரலையால் பாதித்த எமக்கு அரசால் பெரிய அளவிலான உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை. ஆழிப்பேரலைக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவும் நிவாரண முத்திரையுமே அரசால் வழங்கப்பட்டுள்ளன. வேறு எவையும் எமக்கு வழங்கப்படவில்லை.

சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களால் எமக்குப் பல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக நாம் தற்போது குடியிருக்கும் தற்காலிகக் கொட்டில்கள்கூட இந்த நிறுவனங்களாலே அமைக்கப்பட்டுள்ளன.

எமது பிள்ளைகளுடைய கல்வி நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. நாம் தற்போது இருக்கின்ற முகாமிற்கும் பிள்ளைகள் கல்வி கற்கும் இடத்திற்கும் கனதூரம் நடந்து சென்றே கல்விகற்க வேண்டியுள்ளது. பல நிறுவனங்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கென பாடசாலை உபகரணங்கள், சைக்கிள்கள் என்வற்றை வழங்கியிருந்தன. ஆனால், எமது முகாமில் உள்ள ஒருவருக்குக் கூட அத்தகைய உதவிகள் கிடைக்கவில்லை. இதனால், எமது பிள்ளைகள் தமது கல்வியை இடை நடுவில் நிறுத்த வேண்டியுள்ளார்கள்.

தற்போது நாம் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம் காணி ஒருவருடத்திற்கு என்ற ஒப்பந்த அடிப்படையில் தான் தந்தவை. அதுவும் இம்மாதத்துடன் நிறைவு செய்யப்படுகின்றமையால் தொடர்ந்து என்ன செய்யவேண்டும் என்று யோசிக்கவேண்டியுள்ளது. மீண்டும் இடம்பெயர்ந்து வேறு இடத்திற்குச் செல்லவேண்டிய நிலையே காணப்படுகின்றது.

இடப்பெயர்வு என்பது எமது வாழ்க்கையில் தொடர்கதையாகவுள்ளது. எப்போது அக்கதை முடியுமோ தெரியாது.



**சூசைப்பிள்ளை றோசம்மா**
(வயோதிப மாது- யேசுபணி வீட்டுத்திட்டம், சக்கோட்டை)

ஆழிப்பேரலை பாதிச்ச எங்களுக்கு அரசு பெரிசாக ஒன்றையும் செய்து கிழிக்கவில்லை. அவங்கள் தங்கட பிரதேசத்தில தான் கண்ணாயிருந்து வேண்டியவற்றை செய்து கொடுக்கிறாங்கள் தமிழர் என்ற படியால எங்கள கண் திறந்து பார்க்கிறாங்கள் இல்ல.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாம் இடைத்தங்கல் முகாமில நிரந்தர வீட்டு வசதிகளின்றி யாரோ செய்த புண்ணியத்தால தற்காலிக வீடுகளில் இருக்கிறம். அதுவும் இப்ப பெய்த மழையால நிரம்பி வழிந்தது. அதனால, இங்கிருந்து இடம்பெயர்ந்து அருகில உள்ள பள்ளிக் கூடத்தில்தான் இருந்தனாங்கள்.

ஆழிப்பேரலையால எங்கட வீடு முற்றாக அழிந்து போச்சு, தற்போது கியூடெக் -ஹரித்தாஸ் ஆகிய நிறுவனம் இரண்டு அறைகளையுடைய தற்காலிக வீடுகளைக் கட்டித்தந்துள்ளனர். அதில் ஒரு குடும்பம் தான் இருக்க முடியும். எனது மகளும் திருமணம் செஞ்சவ. அவவுடைய குடும்பமும் நாங்களும் ஒரே வீட்டில் தான் வசிக்கிறம். இரண்டு அறையில ஒரு அறையில் 3 பேர் மட்டும் தானுங்க படுத்து எழும்பலாம். எமக்கு அவ்வாறு ஒரு குடும்ப எண்ணிக்கை யெண்ட படியால் சமாளிக்கிறம் கனபேரைக் கொண்ட குடும்பம் என்றால் எவ்வளவு கஷ்ரப்படுவினம்.

இடைத்தங்கல் முகாமில வீடுகள் அனைத்தும் நெருக்கமாகக் காணப்படுகிறதாலையும், அண்மையில் பெய்த மழையாலையும் தொற்றுநோய் பலருக்கு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் வெளிநாட்டு டாக்டர்கள் வந்து எம்மை பரிசோதித்து மருந்துக் குளிசைகளை இடைக்கிடை தாரதால ஓரளவு நோய் பரவ

## இடம் பெயர்வு, சுனாமி, கடும் மழை இவையே எமது இந்த நிலைக்குக் காரணங்கள்

வில்லை.

நாம் முன்னர் இருந்த இடத்திற்கு திரும்பவும் சென்று வாழவேண்டும் என்பதுதான் எனது கடைசிக்கால ஆசையாக இருக்கிறது. ஆனால், அதற்கேற்ற வசதிகள் வாய்ப்புகள் எங்களிட்ட இல்லை. யாரிட்டையாவது கடன் பட்டுக் கட்டுவம் எண்டாலும் உவங்கட 100 மீற்றர் தடையால ஒன்றும் செய்ய முடியாதுள்ளது.



**க.சூரியகுமாரன்**
(வடமராட்சி வடக்கு, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர்)

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் எமது பகுதியைச் சேர்ந்த கரையோரப் பகுதி மக்கள் பெரும் சேதங்களையும் துன்பங்களையும் அனுபவித்தார்கள். இருந்தபோதும் எமது சமாசத்தினூடாக எமது மக்களுக்கு வேண்டிய தேவைகளை கூடுதலாக நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம். அதற்கான சூழ்நிலை அப்போது இருந்தது. அதனைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய அன்றாடம் தேவைப்படும் பொருள்களையும் கடற்றொழில் உபகரணங்களையும் பெற்றுக்கொடுத்தோம்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களில் வடமராட்சி வடக்




குப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் பெரும் பயன் பெற்றனர். அதற்கு எமது சமாசம் கடுமையாகப் பாடுபட்டது.

அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்த உதவிகளை விட சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களே பெருமளவான உதவிகளைச் செய்து கொடுத்துள்ளன. அரசினால் உலர் உணவு முத்திரை, 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டன. இத்துடன் அவற்றின் பணி நின்றுவிட்டது. ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணி தற்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஆழிப்பேரலை அனர்த்த ஓராண்டுப் பூர்த்தியில் எமக்கு சகல வகையிலும் உதவி புரிந்த சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் விடுதலைப் புலிகளின் ஆழிப்பேரலை அனர்த்தச் செயலணியினருக்கும் நாம் நன்றி செலுத்தவேண்டும். குறிப்பாக விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட செயலணி பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக பெரும் அக்கறை காட்டிச் செயற்பட்டதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முழு மூச்சாக உழைத்தனர்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான வேலைத் திட்டங்களை திட்டமிட்டு அரச அதிகாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைக்க வழி ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இவை தவிர கியூமெடிக்கா நிறுவனம் சேதமடைந்த படகுகளின் உரிமையாளர்களுக்கு இயந்திரப் படகுகளை வழங்கியதுடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு சைக்கிள் என்ற அடிப்படையில் வழங்கியுள்ளது.

மெதடிஸ்த திருச்சபை, கியூடெக் நிறுவனம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களான மூவிமெண்டோ, கெயர், யு.என்.டி.பி, யு.என்.எச்.சி.ஆர் மற்றும் அக்ஷன் பாம், போரூட் என்பனவும் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு வீட்டு வசதி மற்றும் இதர வசதிகளைச் செய்துதந்தன.


எமது பகுதி மக்களின் 100இற்கு 75 வீதமான தேவைகள் ஓரளவு தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் மக்களுக்கு இருக்கிற தேவைகளை இனங்கண்டு அடுத்த வருடம் முழுத்தேவைகளும் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.



**செபமாலை - தோமஸ்யூட்**
*(மண்டற்காடு, கிராமசேவையாளர்)*

உலக உணவுத் திட்டத்தினர் எமது மக்களுக்கு உணவல்லாத பலபொருள்களைப் பெற்றுக்கொடுத்தனர். அவை ஓரளவு திருப்தியளிக்கக் கூடியதாகவுள்ளன. ஆனால் இவற்றைப் பெற்றுக்கொண்ட மக்கள் திருப்தி அடைவார்களா என்பது கேள்விக்குரியதாகவே காணப்படுகின்றது.

ஏனைய இடங்களோடு ஒப்பிடும் போது எமது மக்களுக்கு கிடைத்த கடற்றொழில் உபகரணங்கள் சொற்பமானவையே. பெரும்பாலானவர்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் தமது தொழில் உபகரணங்களை இழந்து தொழில் செய்யமுடியாத நிர்க்கதியான நிலையில் உள்ளனர். அவர்களுக்கு இப்போது அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுவது தொழில் உபகரணங்களே அன்றி வேறொன்றுமில்லை.


தற்காலிக வீடு

சர்வதேச, உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் முன்வந்து எமது மக்களுக்கு வேண்டிய அவசர மனிதாபிமானப் பணிகளை செய்து கொடுத்துள்ளன. அது தவிர யாழ். செயலகமும் எமது பிரதேசத்தை முன்னுரிமைப்படுத்தி பல்வேறு வேலைத் திட்டங்களைச்செய்து வருகின்றது.

மக்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சனை என்னவென்றால், தமது சொந்த இடங்களுக்கு மீளவேண்டும் என்பதே. காரணம் அவர்கள் தற்போது தங்கியிருக்கும் இடைத்தங்கல் முகாம் அவர்கள் தொழில் செய்யும் இடத்திலிருந்து பலமைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. அதனால் தொழிலுக்கு உரிய நேரத்திற்கு செல்ல முடியாதுள்ளது. அதுமட்டுமல்ல, மீனவர்களுக்கும் அவர்களுடைய கடற்றொழில் உபகரணங்களுக்கும் தகுந்த பாதுகாப்பு இல்லை. இதனால், பலர் தொழிலுக்குச் செல்ல அச்சமடைகின்றனர்.

அரசினால் 150 நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நிஷாந்த பீரிஸ் என்பவருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. தற்போது இதில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 10 வீடுகள் மேற்படி நபராலும், 42 வீடுகள் புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சாலும் பொறுப்பேற்கப்பட்டு துரிதகதியில் வீடுகளை அமைக்கும் பணிநடைபெறுகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாண்டு நினைவில் மாமலர் தூவுகின்றோம்

மலர்வு 25-10-1948 | உதிர்வு 27-12-1998



**கந்தபுஸ்பதேவி அமரசிங்கம்**
(இசை ஆசிரியை)
பன்னாலை தெல்லிப்பழை
திதி:25-12-2005

நேற்றுப் பிரிந்தாய்
நெகிழ்ந்திட்டோம் நெஞ்சுருகி
ஆற்றுப்பு நீராய்
அழுதிருந்தோம் வீடென்னும்
பேற்றுக்கா யெம்மை
பிரிந்தாலும் தென்றலெனும்
காற்றுப் போல் வந்து
கனிவுடனே தழவியுயிர்
ஏற்றுகிறாய்! தாயே!
எந்நாளும் நின்னினைவிற்
போற்றுகிறோம் பூத்தாவி
பெருமகனே ஏற்றிடுக!

க.அமரசிங்கம்.

அன்புள்ள கொழுநனும்,
ஆசையுள்ள பிள்ளைகளும்,
மருமகனும், பேர்த்தியும்.

(சி/47005)(26-16)

## படகுகள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு.டிசெ.27

சர்வதேச கெயர் நிறுவனம் மாதகல் பகுதியில் கடந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது தங்கள் படகுகளை இழந்த 167 கடற்றொழிலாளர்களுக்கு புதிய படகுகள், அவற்றுக்கான வெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள் ஆகியவற்றை அண்மையில் வழங்கியுள்ளது. வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் கட்டம் கட்டமாக இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-135)


## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு
பின்வருவோர் தேவை

- ரொட்டி தயாரிப்பாளர்
- சமையல் உதவியாளர்கள்
- தேநீர் தயாரிப்பாளர்

திறமைக்கேற்ப ஊதியமும் அரை ஆண்டுக்கான
விசேட கொடுப்பனவும் வழங்கப்படும்
தொடர்பு: சாளினி உணவகம்,
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

(44606)(26-16)


## நெஞ்சை விட்டகலாத 2ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 02 - 1962 | உதிர்வு 27 - 12 - 2003



**மரியாம்பிள்ளை நிக்ஷன்**

அப்பா என்றழைத்து ஈராண்டு சென்றாலும்
எனைத்தேடி வருவீர் ஒருநாள் என நான் நினைத்தேன்
இப்போ புரிகிறது எங்கு நீர் சென்றீரென்று
உம் முகம் காணாத என் சகோதரிக்கு
உம் நாமம் சூட்டி நாம் அழைக்கின்றோம் உம் நினைவாய்!
உன் நினைவாய் கலங்கி நிற்கும்
அம்மாவை தேற்றிடுவார் யாருமில்லை
மழலைகள் நாம் என்ன செய்வோம்
ஆனாலும் யேசுவிடம் அனுதினமும் வேண்டுகின்றோம்
அப்பா உன் ஆன்மா சாந்திபெற...

58/3, மவுண்காமல் றோட்,
யாழ்ப்பாணம்.

அன்பு மகள்:
நிக்ஷன் துஷிந்தா

(44496)(21-19-17-32)


யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்





# Style Park

Perfect Collection

# ஸ்ரைல் பார்க்

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள் அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383

இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



# பதவி வெற்றிடங்கள்

கொழும்பிலுள்ள சுடர் ஒளி பத்திரிகை நிறுவனத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. அச்சிடல் முகாமையாளர்: (Printing Manager) | 30 வயதுக்கு மேற்பட்டவராய் இருத்தல் வேண்டும். |
| 2. அச்சியந்திர இயக்குநர்கள்: (Machine Operators) | க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 3. அச்சியந்திர மைண்டர்கள்: (Machine Minders) | க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 4. பாதுகாப்பு உத்தியோகத்தர்: | அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 5. பாதுகாப்பு ஊழியர்கள்: | அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

- கொழும்பில் தங்குமிட வசதி மற்றும் உணவு வசதி செய்துதரப்படும்.
- தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- விண்ணப்ப முடிவு திகதி: **31-12-2005**
- விண்ணப்பங்களை **'292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்'** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரில் கையளிக்கவும் முடியும்.

(சி/47004) (24-16-26)

# ஜோசப் எம்.பியின் படுகொலைக்குப் பலரும் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

**தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைக் கண்டித்து பலரும் அறிக்கைகளை விடுத்துள்ளனர்.**

### மா.க.ஈழவேந்தன் எம்.பி.

மூத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தின் சடுதியான மறைவு தமிழினத்திற்குப் பேரிழப்பாகும். குறிப்பாக, தென்தமிழ் ஈழமாகிய மட்டக்களப்பு மண்ணைக் காப்பாற்ற நாம் பெரும் முயற்சி எடுத்துவருகின்ற இவ்வேளையில், அம்மண்ணின் மைந்தர் மட்டக்களப்பு தூய மரியாள் தேவாலயத்தில் பாதுகாப்புடன் வந்த நிலையிலும்கூட ஈவிரக்கமற்ற முறையில் தேவாலயத்தினுள்ளே துப்பாக்கி முனைக்குப் பலியானமை எமக்குத் தாங்கமுடியாத துயரினைத் தருகிறது.

மென்மைப்போக்குடன் அவர் காட்சியளித்த நிலையிலும் மென்மையான சொற்களை அவர் கையாண்டபோதும் கொள்கையில் மிக்க உறுதி படைத்தவர்.

எம்.பி. ஜோசப் பரராஜசிங்கத்தை நாம் நீண்டகாலமாக அறிவோம். மட்டக்களப்பு மண்ணோடு ஒட்டி உறவுகொண்ட காலம் தொட்டு அவரும் அவர் குடும்பமும் எமக்கு மிக நெருக்கியவர்களாகினர். அவர் பூக்கும் புன்முறுவல் அனைவரையும் ஆட்கொள்ளும் தன்மை உடையது. மேலெழுந்த நிலையில் மென்மைப்போக்குடையவராகக் காட்சியளிப்பவர். ஆனால், தமிழனின் அடிப்படைச் சிக்கலையொட்டி அவர் கடும்போக்குடையவராய் இருக்கிறார் என்பதை நான் நன்கு அறிவேன்.

பேச்சில் மென்மை. ஆனால், கொள்கையில் உறுதி. கிழக்கு மாகாணத்தை வடமாகாணத்தில் இருந்து பிரிக்கும் சதி முயற்சியை முறியடித்து நாம் ஒன்றுபட்டு வாழ்ந்தால் தான் எமக்கு வாழ்வு உண்டு என்பது அவரின் உறுதியான கோட்பாடு.

தமிழர் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெளிநாடுகள் பலவற்றிக்குச் சென்று காணவேண்டியவர்களைக்கண்டு கருத்துப் பரிமாறியமை உலகின் கருத்தினை எம்பால் ஈர்க்க எமக்குப் பெருமளவு உதவியது. இவர் கையாளும் தூதுவ மொழி(Diplomatic Language) என்பது எமக்கு இன்று மிகத் தேவையான செயற்பாடாகும்.

மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்தில் இரக்கமே உருவான இயேசுவை வழிபட்ட நிலையில் நத்தார் திருநாளில் தேவாலயத்தினுள்ளேயே அவர் சாகடிக்கப்பட்டமை மன்னிக்கமுடியாத கொடூரமான செயலாகும். இக்கொடூரமான செயலை அரசின் உழவுப் படையும் கருநாக வடிவம் கொண்டுள்ள கருணா குழுவுமே சேர்ந்து செய்துள்ளது என்பது எமது ஊகம்.

நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் உற்றுப்பார்க்கின்றபோது எமது ஊகம் தவறில்லை என்பது எமது நம்பிக்கை. இவரின் இழப்புக்காகக் கண்ணீர் விடுகின்ற நாம் எம் இரங்கல் உரையை அவரின் மனைவிக்கும் அவரின் பிள்ளைகளுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

எனினும், எதையும் தாங்கும் இதயத்தோடு எம் இலட்சியத்தை அடையும் வரை எம் பணியைத் தொடர்வதே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். உள்ள உயிர் ஒன்று தான். அது என்றோ ஒருநாள் போகப்போவது உறுதிதான். அது தமிழ் மண்ணிற்காகப் போகட்டும் என்று உறுதி பூணுவோமாக - என்றுள்ளது. (எ)

### செ.கஜேந்திரன் எம்.பி.

கிறிஸ்தவ மக்களின் புனித நாளான கிறிஸ்மஸ் அன்று அவர்கள் புனிதமாகப் போற்றப்படும் தேவாலயத்தினுள் வைத்து இந்தக் கோரக் கொலை இடம்பெற்றுள்ளது.

கத்தோலிக்க மக்களையும் மதத்தையும் அவமதிக்கும் விதமாக மனிதநேயமற்ற வகையில் கோழைத்தனமாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியத்தின் எழுச்சிக்காகவும் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகவும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உழைத்தவர் அவர். தமிழர் தாயத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் அவ்வப்போது மேற்கொண்டுவந்த மனிதப் படுகொலைகளைச் சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்துவதில் முன்னின்று துணிச்சலோடு செயற்பட்டவர் இவர்.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்கும் பிளவுபடுத்துவதற்கும் கிழக்கு மாகாணத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அதனை முறியடிப்பதில் எமது தலைவரோடு பக்கபலமாக நின்று அந்தச் சதி முயற்சியை முறியடிப்பதில் அர்ப்பணிப்புடன் உழைத்த பெருமையும் இவருக்கு உண்டு.

இராணுவம் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களையும் அடக்குமுறைகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளையும் சர்வதேச இராஜதந்திரிகளுக்கு எடுத்து விளக்குவதில் இவர் முன்னின்று செயற்பட்டார்.

இந்தக் கொலைக்கு இராணுவமும் ஜனாதிபதியுமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதுடன் மிலேச்சத்தனமான இப்படுகொலையினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன் - என்று அதில் உள்ளது. (எ)

### சந்திரசேகரன் எம்.பி.

உரிமை இழந்திருக்கும் தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையைத் தாங்கமுடியாதவர்களின் வெறியாட்டமே ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் வக்கிரத்தனமான கொலையாகும்.

அமரர் ஜோசப் பாராஜசிங்கம் அரசியலில் பிரவேசித்ததில் இருந்து தனது வீரம் செறிந்த கருத்துக்களால் இளைஞர் பட்டாளத்திற்குப் புதுவேகத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தவர்.

உலகம் முழுவதும் பரவிவாழும் தமிழர்களின் ஆதர்ச புருசராக அவதானிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். சர்வதேச அரசியல் அவதானிகளின் கருத்தையும் கவனத்தையும் ஈர்கின்ற ஆளுமையுடையவராக இவர் திகழ்ந்திருக்கின்றார்.

பழகுவதற்கு இனிமையுடையவராகவும் கொள்கையிலே உறுதியாகவும் கருத்துகளை வெளிப்படுத்துவதில் துணிச்சல் மிக்கவராகவும் இவர் வாழ்ந்து காட்டியிருக்கின்றார். மட்டக்களப்பு மண்ணில் தமிழ் உணர்வு என்ற விதையை விதைத்தவர்களில் இவரும் முக்கியமானவர் இவரின் மரணம் தமிழ் இனத்திற்கும் தமிழின அரசியலுக்கும் மிகப் பெரும் இழப்பாகும்.

அவரைப் பிரிந்து வாழும் அனைவரினதும் துயரத்தில் மலையக மக்கள் முன்னனி பங்கெடுக்கின்றது - என்றுள்ளது. (எ)

### பத்மினி சிதம்பரநாதன் எம்.பி.

மனித உரிமை தொடர்பான விடயங்களில் கூடிய அக்கறை கொண்ட ஜோசப் எம்.பி. தாயகத்திலும் ஒரு மனித உரிமை அமைப்பைக் கட்டியெழுப்பப் பாடுபட்டவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழுவிலும் உறுப்பினராக அங்கம் வகித்த இவர், ராஜதந்திர ரீதியான தொடர்பு களை ஏற்படுத்தித் தமிழ் மக்கள் மீது கட்ட விழ்த்து விடப்படும் மனித உரிமை மீறல் களையும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான நியாயப்பாடுகளையும் சர்வதேச அரங்கில் எடுத்துக் கூறிவந்தார்.

இவரின் இத்தகைய பணிகளை நிறுத்துவதே கொலையாளிகளின் நோக்கம். மனித உரிமைகள் பற்றி அதிகம் பேசும் சர்வதேச உலகம் இக்கொலைக்கு என்ன சொல்லப் போகின்றது என்பதனைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்தபடியே உள்ளனர்.

தமிழ்மக்களின் குரலை ஒடுக்குவதற்காகவே இத்தகைய அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. தமிழ் மக்களின் குடியிருப்பு நிலங்களில் இராணுவம் பிரசன்னமாகி இருந்தபடியும் துணை இராணுவக் குழுக்களை உதவிக்கு வைத்தபடியும் இந்தப் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இந்த இராணுவ, துணை இராணுவ பிரசன்னத்தை அகற்றித் தமிழ் மக்கள் தமது ஜனநாயக வாழ்வை வாழ்வதற்கு சர்வதேச சமூகம் ஆக்க பூர்வமான நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (எ)

# கொழும்புத்துறையில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல்

கொழும்புத்துறை,டிசெ.27

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றுக்காலை படையினர் பெரும் சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

வீடுவீடாகச் சென்ற படையினர், பொதுமக்களுக்கு ஏற்கனவே தம்மால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டைகளைப் பார்வையிட்டனர். அத்துடன், அடையாள அட்டை இல்லாதவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, இப்பகுதிகளில் மக்கள் குடியிருக்காத வீடுகளையும் படையினர் தீவிர சோதனைக்குட்படுத்தினர்.

அத்துடன், கொழும்புத்துறை பிரதான வீதியூடாகப் பயணித்த பொதுமக்களை இடைமறித்த படையினர் அவர்களை உடற்சோதனைக்கு உட்படுத்தியதுடன், அடையாள அட்டைகளையும் பரிசோதித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-12-17)

## ஆழிப்பேரலை ஓராண்டு நிறைவு: நெடுந்தீவு ஆலயங்களில் நேற்று விசேட பிரார்த்தனை

நெடுந்தீவு,டிசெ.27

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த மக்களின் நினைவாக நெடுந்தீவில் நேற்று விசேட பிரார்த்தனைகள் நடைபெற்றன. இந்து, கத்தோலிக்க ஆலயங்களில் நேற்று முற்பகல் 9.30 மணிமுதல் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டு உயிர்நீத்த மக்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்தனை செய்தனர். (எ-111)

## முறைசாராக் கல்விப் பரீட்சை ஒத்திவைப்பு என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த முறைசாராக் கல்வி செயன்முறைப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்றும் -

இந்தப் பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (எ-12)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.27

படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்களது பாதுகாவலர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரியகுளம் உயர்கல்வி நிறுவனத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் கலந்துரையாடலில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு உப தலைவர் எஸ்.விஜயகுமார் கேட்டுள்ளார். (3-203)

# இராணுவ அராஜகங்களைக் கண்டித்து திருமலையில் இன்று ஒட்டுமொத்தக் கதவடைப்பு

## வீதிகளில் நடமாட்டத்தை முற்றாகத் தவிர்க்கவும் கோரிக்கை

திருகோணமலை,டிசெ.27

இராணுவத்தின் அராஜகச் செயல்களைக் கண்டித்து திருகோணமலையில் இன்று பூரண கதவடைப்புச் செய்து துக்கதினம் அனுஷ்டிக்குமாறு திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ்ச் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அந்த அமைப்பு விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

✱ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் எமது தேசத்தின் விடுதலைக்காகத் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்துப் பணிபுரிந்தவருமாகிய மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைக் கண்டித்தும் -

✱ யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய தாயகப் பிரதேசமெங்கும் ஸ்ரீலங்கா அரச படைகளாலும் தேசிய விரோத ஒட்டுப்படைகளாலும் வஞ்சகமான முறையில் தமிழ் பேசும் மக்கள் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் -

✱ யாழ். புங்குடுதீவில் எமது தமிழ் சகோதரி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு மிருகத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் -

✱ சமாதான ஒப்பந்தத்திற்கு முரணான வகையில் திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரியினுள்ளும் ஏனைய கல்விக் கூடங்களுக்கு முன்பும் கோயில்கள், தேவாலயங்களுக்குப் பக்கத்திலும் வீட்டு வாசல்களிலும் பார்க்குமிடமெங்கும் கொண்டுவந்து குவித்து அவசரகாலச்சட்டத்தின் கீழ் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படைகளை உடனடியாக முகாமுக்குள் அனுப்பக்கோரியும் -

இன்று பூரணகதவடைப்புச் செய்து கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு எமது ஒன்றுபட்ட எதிர்ப்பினைச் சர்வதேசத்திற்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் தெரிவிப்போம்.

இன்றையதினம் உந்துருளிகள், துவிச்சக்கரவண்டிகள் உட்பட எந்த போக்குவரத்தும் நடைபெறக்கூடாது. அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் கல்விக்கூடங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தை, தியேட்டர், வங்கிகள் உட்பட அனைத்து நிறுவனங்களும் பூரணமாக மூடப்படவேண்டும். எவ்வித வன்முறைக்கும் இடங்கொடாது அகிம்சை வழியில் எமது போராட்டம் இடம்பெறவேண்டும்.

கதவடைப்பு என்பது ஒரு கேளிக்கை நிகழ்வல்ல. இது எமது உணர்வின் வெளிப்பாடு. எனவே, தேவையற்ற விதத்தில் முச்சக்கரவண்டிகள், உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பனவற்றில் ஓடித்திரிந்து தேவையற்ற பதற்றத்தை உருவாக்க வேண்டாமென கேட்டுக்கொள்வதுடன், ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையைத் தவிர வேறெவரும் வீதியில் நிற்கக்கூடாது என்றும் அன்புடனும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம். தேவையற்ற விதத்தில் யாராவது வன்செயலில் ஈடுபட்டால் அதனால் வரும் விளைவை அவரே அனுபவித்துத் தீரவேண்டும்.

எங்களினது தாழ்மையான வேண்டுகோளுக்கு எதிராகப் பிரச்சினை உருவாக்கும் நோக்கில் சைக்கிள்களில் சென்றோ அல்லது நடந்துசென்றோ நிறுவனங்களில் கையொப்பமிடுவதும் பூட்டப்பட்ட நிறுவனங்களுக்குள் வேலைசெய்வதும் தேசியத்திற்கெதிரான செயற்பாடாகக் கருதப்படும்.

முக்கியமாக, பிறீமா ஆலை, டோக்கியோ சிமெந்து ஆலை, இலங்கைத் துறைமுக அதிகார சபை ஆகிய நிறுவனங்களும் ஊழியர்களும் எங்கள் நியாயமான வன்முறையற்ற பேராட்டத்திற்குத் தங்கள் பூரண ஆதரவைத் தரவேண்டுமென்றும் -

இன்றையதினம் நிறுவனத்தின் எந்தவொரு போக்குவரத்துச் சேவையும் இடம்பெறக்கூடாது எனவும் - வேண்டுவதுடன் எமது போராட்டம் நியாயமானதென்பதைத் தயவுடன் உணர்ந்துகொள்ளுமாறும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (எ-3)

# மக்கள் நடமாட்டம் எதுவும் இன்றி வெறிச்சோடியது முற்றவெளிப் பகுதி

## படையினர் நடத்திய தாக்குதலை அடுத்து

அரியாலை,டிசெ.27

யாழ். முற்றவெளிப்பகுதி மக்கள் நடமாட்டம் இன்றி மயானம்போல் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை மாலை இப்பகுதியில் ஐந்துபேர் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமையையடுத்து இந்தப் பிரதேசம் மக்கள் நடமாட்டம் எதுவும் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

அத்துடன், இந்தப் பகுதியூடாகப் பயணம் செய்யும் மக்களும் பதற்றத்துடன் பயணிப்பதை அவதானிக்கமுடிகிறது.

இதேசமயம், முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடைகளிலும் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. (எ-17)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் ஒரு Sri Lanka Telecom தொலைபேசி இணைப்பும் தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய Booths அவற்றிற்கான உபகரணங்கள் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 9037556. (44630)

## ஆடு விற்பனைக்கு

4½ மாதம் சினை நிரம்பிய ஜமுனாபாரி காமோரி கலப்பின இரண்டாம் ஈத்து ஆடு (இரண்டு போத்தல் பால் தரக்கூடியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6701461 (44636)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1967 ஆம் ஆண்டு பிறந்த, சதய நட்சத்திரம் நோர்வேயில் குடியுரிமை உடைய, நிரந்தர தொழில் புரியும் (தற்போது இங்கு வந்துள்ளார்) நற்பண்புள்ள மணமகனுக்கு நற்பண்புடைய படித்த மணமகளைத் தாயார் தேடுகின்றார். தொடர்பு: 2773 மே/பா உதயன். (44540)

# செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.27

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த பாடசாலை மட்டக் கணிப்பீடு (தமிழ், கணிதம்) தொடர்பான கருத்தரங்கும் செயலமர்வும் பிற்போடப்பட்டுள்ளன என தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) ஆ.கதிர்காமநாதன் தெரிவித்தார்.

மேற்படி கருத்தரங்கும் செயலமர்வும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்- எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (3-204)

# ஆனைக்கோட்டையில் வீடு அமைக்கத் திட்டம்

நவாலி, டிச.27

வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முள்ளி, காக்கைதீவு, 3ஆம் கட்டை சோமசுந்தரம் வீதி ஆகிய இடங்களிலுள்ள வீடில்லாதவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வீடுகள் சொந்தக்காணி உறுதியுடையவர்களுக்கு மட்டுமே கட்டிக் கொடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-100)

## மீண்டும் எம்மால்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

8 வீடுகள் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தினால் கட்டப்படுகின்றன. இவை அனைத்தும் அடுத்த மாத முற்பகுதியில் கட்டி முடிக்கப்படும். அதன்பின் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

அதேபோல் 33 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன. அவற்றைப் புனரமைக்கப்படுவதற்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு அதற்கான பணிகளும் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

உலக வங்கியும், ஜி.ரி.சற் உம் இணைந்து 124 வீடுகளை சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியில் (2 ½ லட்சம் +2 ½ லட்சம்) அமைப்பதற்கு ஒப்பந்தம் செய்துள்ளனர். அதற்கான மதிப்பீடுகள் செய்யப்பட்டு பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் தை மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று நினைக்கின்றேன். இவ்வாறு பல்வேறு வழிகளில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் நிவாரணத்தை நம்பி இருக்கக்கூடாது. தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். ★

# மகிழ்வுடன் நன்றி கூறுகின்றேன்

நேர்முகப் பரீட்சை ஒன்றிற்காக 31.09.2005இல், ஏ-9 பாதையூடாக சென்றவேளையில், தவறவிடப்பட்ட எனது கல்விச் சான்றிதழ்கள் அனைத்தையும் மீளப்பெற்றதில் மகிழ்வடைந்துள்ளேன்.

இவற்றைக் கண்டெடுத்த பரந்தன் கடை உரிமையாளர் கந்தையா நடராசாவிற்கும் அவற்றை பரந்தன் "CARE" நிறுவனத்தில் கடமை புரியும் எஸ்.சிவாஜினி மூலம் நான் மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்ததற்கும், உதயன் பத்திரிகை விளம்பரம் மூலம் இவை எனக்குக் கிடைக்க உதவியாக இருந்ததற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செல்வி நாகலிங்கம் ஜெயராணி**
ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

(44632)(32-19-17)

# வேறாம் பினான்ஸ் லிமிட்டெட்

[கலைப்பில் உள்ளது]

*இத்தால் சகலரும் அறிக,*
*2005 மார்கழி முதலாம் திகதியில் இருந்து மேற்படி நிறுவனத்தின் அலுவலகம் கீழ்க்கண்ட முகவரியில் இயங்குகிறது.*

Liquidators,
C/O, **SJMS** Associates,
2nd Floor, Polytechnic Building,
No.30, Galle Road, Wellawatte, Colombo - 06.
T.P.: 2508874.

(சி/47062)(32-17-19)

# யூனியன் டிரஸ்ற் அன்ட் இன்வெஸற்மன்ஸ் லிமிட்டெட்

[கலைப்பில் உள்ளது]

*இத்தால் சகலரும் அறிக,*
*2005 மார்கழி முதலாம் திகதியில் இருந்து மேற்படி நிறுவனத்தின் அலுவலகம் கீழ்க்கண்ட முகவரியில் இயங்குகிறது.*


Liquidators,
C/O, **SJMS** Associates,
2nd Floor, Polytechnic Building,
No.30, Galle Road, Wellawatte, Colombo - 06.
T.P.: 2508874.

(சி/47063)(32.19.17)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம!

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 19 - 01 - 1936



மறைவு 28 - 11 - 2005

## அமரர் தம்பித்துரை நடராஜா

*(சாயி நடராசா, சங்கானை)*

*உயிர் தந்து உறவாகி*
*உணர்வெல்லாம் நீராகி*
*தாய்க்குத் தாயாய்*
*தந்தைக்கு தந்தையாய்*
*பொழுதெல்லாம் உறவாடி*
*வாழ்வுயர்ந்து நாம் சிறக்க*
*மனதுருகி மகிழ்ந்தீரே!*
*இனி என்று காண்போம்*
*உமைப் போல் ஒரு தந்தையை!*

*இன்று (27.12.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

பிரதான வீதி,
சங்கானை.

உங்கள் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள்.**

(சி/47063)(32-19-17)

# பதவி வெற்றிடம்

ஆசியாவின் சமூகப் பொறுப்புப் பிரிவில் முதலிடம் வகிப்பதும், இலங்கையில் முதலிடத்தில் திகழும் செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் கம்பனியின் சுன்னாகம் கிளையில் பின்வரும் பணிநிலை வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம் கோரல் - ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

பதவி - **விற்பனை/நிதி ஆலோசகர்**

தகைமை - க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி. மேலதிகமாக காப்புறுதித் துறை சார்ந்த அறிவும் ஈடுபாடும் இருப்பதுடன் பணியில் கூடிய ஊக்கத்துடன் செயற்படும் திறன் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமானதும் வரையறையற்றதுமான கொடுப்பனவு வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு:- ஏனைய காப்புறுதித் துறை சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களின் திறமைக்கேற்ப பதவி வழங்கப்படும்.

**05.01.2006 இற்கு முன் தங்களது சுயவிவரத்துடனான விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி :**

**முகாமையாளர்,**
*செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி (ஆயுள்),*
*145, 146, K.K.S. வீதி , சுன்னாகம்,*
*யாழ்ப்பாணம்.*



எக்காரணத்தை முன்னிட்டும் குறித்த திகதிக்கு முன் வந்து சேராத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (சி/47057)(32-19-17)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் அப்பையா கந்தசாமி *(சிற்றம்பலம்)*

(தபால் ஊழியர், கரவெட்டி தபாலகம்)

*கடந்த 27.11.2005 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று (27.12.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

(44607)(32-19-17)

தகவல்:
**க.ஜெகதலப்பிரதாகரன்** (மகன் - ஆஸ்திரேலியா),
**க.ஜெகஜிம்மன்** (மகன் - யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவன்)

**உச்சில் ஒழுங்கை,**
**கரவெட்டி தெற்கு,**
**கரவெட்டி.**

# 31ஆம் நாள் நினைவு தின அழைப்பு

*அன்புடையீர்!*

*அமரத்துவம் அடைந்த*

## சதாசிவம் சின்னத்தம்பி

*(அப்பண்ணா)*

*நினைவாக நாளை (28.12.2005) புதன்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும் சமயக்கிரியைகளிலும் பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

*குறிப்பு: ஒவ்வொருவரும் இதனை தங்களுக்குத் தரப்பட்ட தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.*

*சதாபொன்ஸ்,*
*அல்வாய்.*
T.P.: ***021 - 2263206.***

**குடும்பத்தினர்.**

(சி/44065)(32-17-19)

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பதிவு இலக்கம்:- ஜே/1591-06-03-72

# பதவி வெற்றிடம்

**01.பதவி:- சாரதி**

குறியீட்டு இலக்கம்:- 312/15

சம்பள அளவுத்திட்டம்:- 3500, 65 X 10, 70 X 10 -4830/-

(கூ.வே.ஆணைக்குழு சுற்று நிருப இல.31/99இன் படி)

சங்கம் வழங்கும் இதர படிகளும்

தகைமைகள்: 5ஆம் வகுப்பு சித்தியுடன், இலகுரக வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரமும், ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.(சங்கத்தின் இரண்டு சில்லு உழவு இயந்திரம் இயக்கி கிளைகள், வடிசாலைக்கு கள் மாற்றம் செய்தல்)

வயது: 18 - 45

**02.பதவி முகாமையாளர்**

குறியீட்டு இலக்கம்: 115/113

சம்பள அளவுத் திட்டம் : 4000 - 75 X 10, 80X10 - 5550/- (கூட்.வேலை, ஆணைக்குழு சுற்று நிருப இல. 31/99 இன் படி)

சங்கம் வழங்கும் இதர படிகளும்

தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி (சாதாரணம்) சித்தி அல்லது க.பொ.த.(சாதாரணம்) கணிதம் / வர்த்தக எண் கணிதம் / எண்கணிதம், சிங்கள /தமிழ் மொழியினை உள்ளடக்கியதாக 04 திறமைச் சித்தியுடன், 6 பாடங்களில் சித்தியும், அத்துடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்குக்குறையாத அனுபவம். (போத்தலில் கள் அடைத்தல், வெல்ல உற்பத்தியில் நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்)

வயது: 18 - 45

சங்கம் கோரும் பிணை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்தவேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் விநியோகிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும். வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும். சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், அனுபவ சான்றிதழ் போட்டோப் பிரதி இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் **பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகையிரத நிலைய வீதி, மல்லாகம்** என்ற முகவரிக்கு 12-01-2006 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அன்றேல் நேரிலோ விண்ணப்பிக்கலாம், கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறித்து..... பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும். பூரணப்படுத்தாத விண்ணப்பமும், தகைமையில்லாத விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

*புகையிரத நிலைய வீதி,*
*மல்லாகம்,*
*22-12-2005*

(சி/47067)(26-32-17-19)

**பொதுமுகாமையாளர்.**



கடலைப் பார்த்துக் கதறும் உறவினர்கள்...



நினைவிடங்களில் வீழ்ந்து புலம்பும் உரித்துகள்...

# ஆயிரக்கணக்கில் தீபங்களை ஏற்றி உறவினர்கள் கதறி அழுது அஞ்சலி

— வடமராட்சி, கரவெட்டிச் செய்தியாளர்கள் —

வடமராட்சி,டிசெ.27

ஆழிப்பேரலையால் வாரி அள்ளிச்செல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் முதலாமாண்டு தின வைபவங்கள் நேற்று வடமராட்சியின் கரையோரங்களில் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

இப்பிரதேச மக்கள் உயிரிழந்த தம் உறவுகளின் நினைவிடங்களில் ஆயிரக்கணக்கான தீபங்களை ஏற்றியும் மலர்களைத் தூவியும் உணவுப் பண்டங்களைப் படைத்தும் கதறி அழுது கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்திய காட்சி மனதை உருக்கியது.



ஆயிரத்து 200 தீபம் ஏற்றும் நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றப்படுகிறது...

கரையோரப் பிரதேசங்களில் உள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசைகளும், ஆராதனைகளும் இடம்பெற்றன. வடமராட்சி வடக்கில் உள்ள கரையோரப் பகுதிகளில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டும் ஒலிபெருக்கிகளில் சோககீதம் இசைக்கப்பட்டும் இந்து, கிறிஸ்த ஆலயங்களில் விசேட பூசைகள், ஆராதனைகளும் நடத்தப்பட்டு முதலாமாண்டு நினைவு கூரப்பட்டது. விசேட பூசை வழிபாடுகளில் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

வடமராட்சி வடக்கு கரையோரப் பிரதேசத்தில் பிரதான நினைவு தின நிகழ்வு பருத்தித்துறை முனை புனித தோமையர் தேவாலய முன்றிலில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சர்வோதய அமைப்பின் அனுசரணையுடன் சமாச பொதுமுகாமையாளர் கே.சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் பிரம்மஸ்ரீ எஸ். வைத்தியநாதக்குருக்கள், பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன், சர்வோதய அமைப்பின் யாழ். பிராந்திய அமைப்பாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் அஞ்சலியுரையாற்றினார்கள். தொடர்ந்து சர்வோதய அமைப்பினால் வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிட்டி தீப ஒளி விளக்குகள் தேவாலய முன்றிலில் பேரலையால் உயிரிழந்த ஆயிரத்துக்கும் அதிகமானோரின் ஞாபகார்த்தமாக உறவினர்களாலும் பொதுமக்களாலும் ஏற்றப்பட்டன. முதன்மை தீப ஒளி விளக்கினை கே.சிவநேசன் எம்.பி., சமாச பொது முகாமையாளர் கே.சூரியகுமார், சமாசத் தலைவர் டொன் பொஸ்கோ, உபதலைவர் குட்டித்தம்பி தனபாலசிங்கம், சர்வோதயத்தின் யாழ். அமைப்பாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் இணைந்து ஏற்றினார்கள். இதன் பின்னர் கரையோரமாக தரித்து நின்ற கடற்கலங்களிலும் சிட்டி விளக்குகள் ஏற்றப்பட்டன.

முதலாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி தேவாலயத்துக்கு அருகில் உள்ள புனித தோமையர் சனசமூக நிலையத்தில் வைத்து யாழ்.போதனா வைத்தியசாலை நடமாடும் இரத்த சேகரிப்புப் பிரிவினர் வருகைதந்து இரத்த தானத்தில் கலந்துகொண்டனர். ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் உட்பட 200 பேருக்கு மேற்பட்டோர் இரத்ததானம் செய்தனர்.


பருத்தித்துறை, தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் முதலாம் ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன், கற்கோவளத்தில் பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கென 'ஹியூமெடிக்கா' நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 55 வீடுகளும் இன்பருட்டியில் 'போரூட்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 35 வீடுகளும் குடியிருப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்டன. அத்துடன் இதே நிறுவனத்தால் இன்பருட்டியில் 7 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய சந்தையும் கையளிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் ஒரு பகுதியான மணல்காட்டில் ஆழிப்பேரலையால் பலியான 71 பேரின் நினைவாக அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலும் அங்குள்ள புனித அந்தோனியார் தேவாலயத்திலும் அருட்திரு டேமியன் அடிகளாரினால் விசேட பூசைகள், திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. மணல்காட்டுப் பங்குத் தந்தை அருட்திரு றோய் பெர்டின்டும் உதவியாக இருந்தார். தொடர்ந்து மதிய உணவு வழங்கப்பட்டது.

### மணல்காட்டில்

மணல்காடு சேமக்காலையில் நூற்றுக்கணக்கான மக்களும் மதத்தலைவர்களும் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தினர்.

உயிரிழந்தவர்களில் 72 பேரின் நினைவாக அங்கு நிறுவப்பட்டிருந்த நினைவுத் தூபியை வண.பிதா டேமியன் திறந்து வைத்தார். பொதுச் சுடரையும் அங்கு அவர் ஏற்றினார். திருப்



உயிரிழந்தோரின் பெயர்கள் பொறித்த நினைவுத் தூபி...

பலி பூசையை வண.ரெஜி இராசேந்திரம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார்.

உயிரிழந்தோர் நினைவாக அங்கு நிறுவப்பட்ட மீனவர் இளைப்பாறும் இடத்தில் தென்னங்கன்றுகள் நடப்பட்டன.

(ஐ-70-173)





படங்கள் : சுந்தரலிங்கம்

# முல்லைத்தீவு புனித ராயப்பர் ஆலய நினைவிடத்தில் உணர்வுபூர்வ அஞ்சலி

— புதுக்குடியிருப்புச் செய்தியாளர்கள் மு.விக்னேஸ்வரன் —

புதுக்குடியிருப்பு,டிசெ.26

ஆழிப்பேரலை காவுகொண்ட ஒரு வருட நினைவு நிகழ்வுகள் 'சுனாமி' நினைவாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட முல்லைத்தீவு புனித ராஜப்பர் ஆலயத்தில் நேற்றுக்காலை உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, யாழ்.ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை கேணல் சூசை அரைக்கம்பத்தில் ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து புனித ராஜப்பர் நினைவாலயத்தினை முல்லைத்தீவு மாவட்ட விசேட ஆணையாளரும் பிரதேச செயலருமான இ.கிருஷ்ணபிள்ளை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

அடுத்து, நினைவாலயத்தினுள் சர்வமத வழிபாடுகள் இடம்பெற்றன. யாழ்.ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். தொடர்ந்து சைவ சமயப் பிரார்த்தனையை க.சோமசுந்தரக் குருக்களும் இஸ்லாமிய சமயப் பிரார்த்தனையை முத்து முஹமதுவும் நிகழ்த்தினர்.

ஆழிப்பேரலை நினைவான நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நினைவாலயத்தினுள்ளே ஆழிப்பேரலையால் இறந்தவர்களது படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன. நினைவாலயத் தூண்களில் இறந்தவர்களது பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுப் பிரதேசமெங்கும் கறுப்பு வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன், இடைத்தங்கல் முகாம்களில் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. வீடுகளிலும் கிரியைகள் நடைபெற்றன.

(ஐ-353-203)



அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்...

கிறிஸ்மஸ் கொண்டாட்டம் நிகழ்ந்த

# கேளிக்கை விடுதியில் பெரும் தீ விபத்து சீனாவில் 30பேர் உடல் கருகிச் சாவு!

பீஜிங்,டிசெ.27

சீனாவில் கிறிஸ்மஸ் பண்டிகைக் கொண்டாட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த கேளிக்கை விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பெரும் தீ விபத்தில்30 பேர் உடல்கருகிப் பலியாகினர்.மேலும் 20 பேர் வரை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தீவிபத்துக் குறித்து அதிகாரிகள் தீவிரமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சீனாவின் தென்பகுதியிலுள்ள குவான்டங் மாகாணத்தில் சங்சாங் என்ற நகரத்தில் உள்ள கேளிக்கை விடுதியொன்றில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பெருமளவானோர் கலந்துக்கொண்டிருந்தனர். அங்கு கேளிக்கை நிகழ்வுகளும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

அப்போது அந்த விடுதியின் மையப் பகுதியில் திடீரெனத் தீப்பிடித்துக் கொண்டது. விடுதியின் அனைத்து வாசல்களுக்கும் தீ பரவியமையால் உள்ளே இருந்தவர்கள் வெளியேற முடியாமல் தவித்தனர். இதனால் அதில் சிக்கிக் குறைந்தது 30 பேர் வரை உயிரிழந்தனர். மேலும் 20 பேர் எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உடனடியாகத் தீயணைப்புப் படையினரும் மீட்பு அணியினரும் விரைந்துவந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். சில மணி நேரத்தின் பின் தீ அணைக்கப்பட்டது. இந்த அனர்த்தம் குறித்து தீவிரவிசாரணைளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தீவிபத்து மின் ஒழுக்குக் காரணமாக அல்லது வாயுசிலிண்டர் வெடித்தமையால் ஏற்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சீனாவின் அண்மைக்காலமாக விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வாகனவிபத்துக்கள் தீவிபத்துக்கள் நிலக்கரிச்சுரங்க விபத்துக்களால் பல நூற்றுக் கணக்கானோர் அண்மைகாலத்தில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதுடில்லியில் கட்டடம் சரிந்தது; பதினொரு பேர் உயிரிழந்தனர்!

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் கட்டடப் பணி நடந்துகொண்டிருந்த வணிக வளாகத்தின் அடித்தளம் சரிந்து வீழ்ந்ததில் 11 பேர் உயிரிழந்தனர்.

புதுடில்லியில் வணிக வளாகத்தில் தனியார் நிறுவனம் ஒன்று கட்டப்பட்டு வந்தது அங்கு நேற்றுமுன்தினம்காலை கட்டுமானப் பணி நடந்துகொண்டிருந்தது. அப்போது திடீரென அடித்தளப் பகுதி சரிந்து வீழ்ந்தது. இதில் இருபதுக்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கினர். இவர்களில் 11 பேர் உயிரிழந்தனர்.

பொலீஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)



ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஓராண்டு நினைவு நிகழ்வு பாதிக்கப்பட்ட நாடுகளெங்கும் நேற்று நினைவு கூரப்பட்டது. இந்தியாவின் தமிழகத்தின் கரையோரப் பகுதியில் ஆழிப்பேரலைக்கு தனது உறவுகளைப் பறிகொடுத்த தாய் ஒருவர் கடலைப் பார்த்து வணங்குகின்றமையைப் படத்தில் காணலாம்.

# பாக்., இந்தோனேசியாவில் நிலநடுக்கம் மக்கள் வீடுகளை விட்டுத் தப்பியோட்டம்

இஸ்லாமாபாத்,டிசெ.27

பாகிஸ்தான், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது.அச்சத்தினால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். சேத விவரம் பற்றிய தகவல்கள் தெரியவரவில்லை.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் மற்றும் அதன் வடக்கு நகரங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டது. ரிச்டர் அளவுமானியில் 5.2 புள்ளியாகப் பதிவாகி இருந்தது.

விடுமுறை என்பதால் பெருபாலான மக்கள் வீடுகளில் இருந்தனர். நிலநடுக்கத்தை உணர்ந்தும் அலறி அடித்து வெளியே வந்தனர். கடந்த ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கப்பாதிப்பு இன்னும் மறையாத நிலையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கம் மக்களை அதிர்ச்சியில் உறையவைத்தது.

நிலநடுக்கத்தால் ஏற்கனவே சிதைந்து போயிருந்த ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது. முசபராபாத், பாலகோட், மன்சேரா ஆகிய இடங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

கடந்த ஆண்டு ஆழிப்பேரலைக் கோரத் தாண்டவம் ஆடிய இந்தோனேசியாவில் அடுத்தடுத்து மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. முதல் நிலநடுக்கம் நியாஸ் தீவில் உணரப்பட்டது. காலை 7.08 மணிக்கு ஏற்பட்ட அந்த நிலநடுக்கத்தின் அளவு ரிச்டர் அளவு மானியில் 4.6 புள்ளியாகப் பதிவாகி இருந்தது.

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட இந்தோனேசியா அதிபர் சுசிலோ பம்பாங் நியாஸ் தீவுக்குச் சென்றார். அவரை வரவேற்க மக்கள் காத்திருந்த போது நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அடுத்த இரண்டு நிலநடுக்கங்கள் சுமத்திரா தீவுப்பகுதியில் ஏற்பட்டது. ரிச்டர் அளவுமானியில் அவை முறையே 4.7 மற்றும் 5.4 புள்ளிகளாகப் பதிவாகி இருந்தது.

சேதம் பற்றிய தகவல்கள் இல்லை. (க)

## 40 மாணவர்கள் நேபாளத்தில் கைது

காத்மண்டு,டிசெ.27

நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட 40 மாணவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜபா மாவட்டத்தில் உள்ள பத்ராவூர் நகரில் எதிர்கட்சிகளுடன் இணைந்து மாணவர்கள் அரசை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகர் கோட் என்ற இடத்தில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட 40 மாணவர்களை பொலீஸார் கைது செய்தனர். (க)

# இரண்டு ஆண்டுக்கான பட்ஜெட் ஐ.நாவின் பொதுச்சபை அங்கீகாரம்

ஜெனீவா, டிசெ. 27

ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான பட்ஜெட் தொகை 17 ஆயிரத்து 100 கோடிரூபா (இந்திய மதிப்பில்) எனவும் இதனை ஐ.நாவின் பொதுச்சபை அங்கீகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. பொதுச்சபையில் 191 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதில் வறிய மற்றும் வளரும் நாடுகளின் எண்ணிக்கை 133 ஆகவுள்ளது.

ஐ.நாவுக்கு வழங்கப்படும் நிதியில் 80 சதவீதத்தை செல்வந்த நாடுகளே வழங்கி வருகின்றன. அமெரிக்காவும், ஜப்பானும், 40 சதவீதமும், ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 25 நாடுகள் 40 சதவீதமும் அளித்து வருகின்றன. ஐ.நாவின் சீர்த்திருத்த நடவடிக்கைகள் மற்றும் செலவீனங்களை ஒன்றாக இணைக்க வேண்டும் என அமெரிக்கா உட்பட செல்வந்த நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. இதை 77 வறிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. கூடுதல் நிதி அளிக்கும் செல்வந்த நாடுகளே ஐ.நா. நிதி விவகாரத்தின்மீது கட்டுப்பாடு ஏற்படுத்தும் முயற்சி இது என வறிய நாடுகள்.

இந்தப் பிரச்சினை பற்றி பல மாதங்களாக விவாதம் நடந்தது. எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் இதற்கு முடிவு எடுக்கவேண்டும் என்ற நிலையும் இருந்தது. நேற்றுமுன்தினம் இதுபற்றி உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்தினர். இறுதியாகச் செல்வந்த நாடுகளின் நிர்ப்பந்தத்துக்கு வறிய நாடுகள் பணிந்தன. எனினும், இந்த நடவடிக்கை தற்காலிகமானதே என கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து பொதுச் சபையில், இரண்டு ஆண்டு கால பட்ஜெட் தொகையான ரூ. 17 ஆயிரத்து 100 கோடிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இதில் 2006ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ.4 ஆயிரத்து 275 கோடியே என்பது குறிப்பிடத்தக்கது. முதல் 6 மாதங்களிலேயே இந்தத் தொகை செலவழிக்கப்பட்டுவிடும். இதனால் ஐ.நா. நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (க)

உலக அரங்கில்

# மூன்று செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது ரஷ்யா

பாதுகாப்புத்துறை உட்பட பல துறைகளுக்குப் பயன்படும் மூன்று அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களை ரஷ்யா நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

1980 இல் இராணுவம் , அரசதுறை உட்பட பல துறைகளுக்குப் பயன்படும் அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ ரஷ்யா திட்டமிட்டது. சோவியத் ஒன்றியம் உடைந்ததால் நிதி நெருக்கடியால் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி செயற்கைகோள்களை விண்ணில் ஏவ ரஷ்யா தீவிரமாக முயற்சித்து வந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கஜகஸ்தானில் உள்ள பைக்கானுர் ஏவுதளத்திலிருந்து மூன்று செயற்கைகோள்களும் புரோட்டான்- கே ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டன. பிற்பகல் அளவில் வெற்றிகரமாக விண்வெளியில் செயற்கைக் கோள்கள் நிலை நிறுத்தப்பட்டன. இந்தச் செயற்கைக் கோள்கள் ஏழு ஆண்டுகள் பூமியின் நீள்வட்டப்பாதையில் சுற்றி பல்வேறு தகவல்களை பூமிக்கு அனுப்பும் . செயற்கைக் கோள்களிலிருந்து கிடைக்கும் தகவல்களை இந்தியாவும், ரஷ்யாவும் பங்கிட்டுக் கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)





## எய்ட்ஸைத் தொற்றவைத்த குற்றச்சாட்டு மீள் விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

லிபியா நாட்டின் பென்காசி நகரின் மருத்துவமனை ஒன்றில் 400இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு வேண்டுமென்றே எச்.ஐ.வி. கிருமித் தொற்றைச் செலுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து பல்கேரியர்கள், ஒரு பாலஸ்தீன மருத்துவர் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த மரண தண்டனையை ரத்துச் செய்து லிபியாவின் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பென்காசியிலுள்ள குற்றவியல் நீதிமன்றம் வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமென நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனையில் சுகாதாரம் இல்லாமையினால்தான் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டது. தாங்கள் வேண்டுமென்றே கிருமித் தொற்றை ஏற்படுத்தவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

2004ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட இவர்கள் ஏற்கனவே 7 ஆண்டுகளைச் சிறையில் கழித்துவிட்டனர். இந்த நிலையில் லிபிய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை பல்கேரிய அரசு வரவேற்றுள்ளது.



ஜப்பானில் கடும் பனிப் பொழிவு காரணமாக தடம்புரண்ட அதிவேக ரயிலையும், அது மோதியதால் இடிந்து விழுந்த கட்டடத்தினையும் படத்தில் காணலாம்.

# ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்புகளுக்கான மீள்கட்டுமானத்துக்கு 'ஜயலங்கா' செயற்றிட்டம்

## ஜனாதிபதி நேற்று ஆரம்பித்து வைத்தார்

ஹிக்கடுவ, டிச.27

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காகத் துரிதகதியில் செயற்படக்கூடிய வகையில் 'ஜயலங்கா' எனும் செயற்றிட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஆரம்பித்து வைத்தார்.

ஆழிப்பேரலை ஏற்பட்டு ஒரு வருடம் நிறைவான நேற்றைய தினம் ஹிக்கடுவ பெரேலிய ப்குதியில் ஆழிப்பேரலை அனர்த்தத்தை நினைவுகூரும் தேசிய நிகழ்வு நடைபெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முப்படைத் தளபதிகள், அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் என்ப் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் ஆழிப்பேரலை தாக்கிய நேரமான காலை 9.26 மணிக்கு தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் ஏற்றிய ஜனாதிபதி பின்னர் ஆழிப்பேரலை அனர்த் தத்தின் ஞாபகார்த்த உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார். அங்கு ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பிலான ஞாபகார்த்த முத்திரைகள் நான்கும் வெளியிடப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அனைத்து இன மக்களும் தேசிய ரீதியில் ஒன்றுபட்டு பலமாக இருந்தால் ஆழிப்பேரலையை மட்டுமல்ல, அதனைவிடப் பெரிய சவால்களையும் வெற்றிகரமாக எதிர்நோக்க முடியுமென்று தெரிவித்தார்.

தெற்காசியாவில் மோசமான அழிவை இலங்கைக்கு ஏற்படுத்திய ஆழிப்பேரலை அனைத்து இனங்களினதும் ஒற்றுமையை வலியுறுத்திவிட்டுச் சென்றதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இவ்வாறான அனர்த்தம் இனியும் ஏற்படக் கூடாதென்றும் தெரிவித்தார். ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

நாட்டுமக்கள் என்ற அடிப்படையில் ஒன்றுபடுவதன் மூலம் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள முடியும். கடந்த வருடம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. அனர்த்தத்தை அடுத்து எமது மக்கள் எடுத்த கூட்டு முயற்சிகள் உலகின் பல நாடுகளை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

இன்று நான் அந்தத் திடசங்கற்பத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஜயலங்கா' நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கிறேன். 'ஜயலங்கா' நிகழ்ச்சித்திட்டம் மூலம் ஆழிப்பேரலையில் அழிவுற்ற வீடுகள் உட்பட பொதுச் சொத்துகளை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைப் புதிய உத்வேகத்துடன் முன்னெடுத்துச்செல்ல நான் எதிர்பார்க்கிறேன். அது எனது தனிப்பட்ட கண்காணிப் பின்கீழ் இடம்பெறும்.

எமது நாட்டைச் சுற்றியுள்ள பெரிய கடல் இற்றைக்கு ஒருவருடத்துக்கு முன் எமக்குத் தந்த சவாலை நாம் ஏற்றுக் கொண்டதைப்போல அதைவிடப் பலமாக நாட்டில் ஏற்படும் எந்தவொரு சவாலையும் எதிர் கொண்டு அதனை வெற்றிகொள்ளவேண்டும் - என்றார். ஜனாதிபதி.

(க-ஓ)


இலவச கணணி கற்கை நெறி

ஏராளமான சிறப்புச் சலுகைகளுடன்...

இடம்: ரிம்பர் மண்டபம் (யாழ். மத்திய கல்லூரிக்க அருகில்)
காலம்: 30,31-12-2005 (வெள்ளி, சனி)

மேலதிக விபரங்களுக்கு நாளைய உதயனில்

SAAMSTECH 841 Hospital Road, 4591571
233/4 Kasthuriyar Rd. 2229505


## நினைவழியா ஓராண்டு

தோற்றம்
04
11
1922



மறைவு
06
01
2005

### அமரர் வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை
(இளைப்பாறிய ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

பழக இனியசுபாவம் பாசாங்கற்ற பேச்சு
குழந்தை போலத் துள்ளிக் குதூகலிக்கும் ஐயா
நிழலைப் போல மனதில் நிற்குதுங்கள் முகமே!
அழகு முகமேகாண அழுது ஏங்குகின்றோம்.

முருகேசபண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(44649)(16)

## கண்ணீர் அஞ்சலி



24.12.2005 அன்று அகாலமரணமடைந்த
எமது கல்லூரியின் காவலாளர்

### கிருஷ்ணன் விமலேஸ்வரன் (செல்வம்)

அவருக்கு கல்லூரி சமூகம் இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், பிரதிஅதிபர்கள்,
ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

(44554)
(54-15-13)

## கண்ணீர் அஞ்சலி



வடஇலங்கை ஹோமியோபதி சங்க ஸ்தாபகரும் தலைவரும்,வடஇலங்கை அக்குபஞ்சர் சங்க போசகருமான

அமரர் வைத்திய கலாநிதி

### அம்பலவாணர் கிருஷ்ணசாமி ஐயா

23.12.2005 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வட இலங்கை அக்குபஞ்சர் சார்பில்
தலைவர் , து. புவிதாசன்.

(44551)
(54-15-13)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தில்லையம்பலம்

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தில்லையம்பலம் (முன்னாள் ராஜா கூட்டுத்தாபனக் கணக்காளர்) அவர்கள் நேற்று (26.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை (அமரர்) -பாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி -சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் சத்தியபாமா, சசிவர்ணன், சதீஸ்வரன், சரவணபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசநாயகம் (அமரர்), நாகராசா (கனடா), அகிலாண்டேஸ்வரி (வவுனியா), சோமசுந்தரம் யோகேஸ்வரி, மங்களேஸ்வரி, இராஜேந்திரன் (பிரான்ஸ்), இராசமலர், பத்மதேவி, சிவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதாகரன் (பிரான்ஸ்) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
தொ.பே.: 0776745767.

20/33, வைரவர் கோயில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-47076)
(54-15-13)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்

பிரசன்னா, லைலா
உங்கள் பிரகாஷ்ராஜ் வழங்கும்

கண்ட நாள் முதல்

காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15

மனோகரா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த

ஆறு

காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நாகம்ஸ் சுன்னாகம்

பிரசன்னா, மீராஜஸ்மின்
நடித்த

கஸ்தூரிமான்

தினசரி:
புது நேரம் 10.00, 1.00, 4.00, 7.00

ராஜா யாழ்ப்பாணம்

விஜய், ஜோதிகா, வடிவேலு
நடித்த

திருமலை

காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30

(46404)


## மரண அறிவித்தல்கள்

### செல்வநாயகம் தயாபரன்



இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் தயாபரன் 25.12.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகம் -கௌரி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் கௌசலாவின் அன்புக் கணவரும் சிவகுமார் (புங்குடுதீவு மகாவித்தியாலயம்), ரவீந்திரன் (டென்மார்க்), ஸ்ரீபதி (இணுவில்), மேகனதாஸ் (கனடா), இராகவன் (சுரேஷ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வநாயகி, விமலா, இராசமனோகரன் (மக்கள் வங்கி, கிளிநொச்சி), லக்சுமி, சிவாஷினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செல்வரத்தின உபாத்தியார்,
(ஓய்வு பெற்ற ஆசிரியர்).

(44552)
(54-15-13)

### நல்லையா சிவபாதம்



குப்பிளான், வீரமனையைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சிவபாதம் அவர்கள் 20.12.2005 அன்று சுவிஸில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற நல்லையா- இராசம்மா தம்பதியரின் மகனும் இராசமணியின் கணவரும் அன்பழகன் (சுவிஸ்), மதியழகன், சத்தியசீலன் (கனடா), புவிதாஸ் (கனடா), சிவறமணி (உரும்பிராய் இந்துக் கல்லூரி-உயர்தரமாணவி), அவர்களின் தந்தையும் சிவதாரணியின் அன்பு மாமனாரும் ஆவார். அவரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.12.2005) சுவிஸ் நாட்டில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

(44557)
(54-15-13)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### காசிப்பிள்ளை மார்க்கண்டு
(சிவன் கோயிலடி-காரைநகர்)



காரைநகர், சிவன் கோயிலடியை பிறப்பிடமாகவும் கனடாவை (Toronto) வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை மார்க்கண்டு 25.12.2005 அன்று காலமானார்..

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை (பரமு)- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தகுமாரியின் (கனடா) அன்புக்கணவரும், செந்தில்குமரன் (கனடா), சிவகுமார் (கனடா), சிவரூபன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் தியாகராசா, நடராஜா, காலஞ்சென்ற செல்வராஜா, பராசக்தி ஆகியோரின் சகோதரனும் தவராசா (லண்டன்), செல்வராசா (கொழும்பு), மகாராசா (கனடா), காலஞ்சென்ற நமசிவாயம் (சிவகுமார் ஸ்ரோர்), தனேஸ்வரி (காரைநகர்), காலஞ்சென்ற ஞானம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2005) காலை 9 மணியளவில் (ப.நேரம்) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சிவசக்தி வாசம்'
20/11,வைரவர் கோயில் ஒழுங்கை,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(44555)
(54-15-13)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
021-222 7687
0779586996
0112599138

### தாமு மார்க்கண்டு
(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை (ஆவரங்கால் சந்தி) வசிப்பிடமாகவும் கொண்ட தாமு மார்க்கண்டு அவர்கள் 26.12.2005 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் வனயாதேவியின் பாசமிகு கணவரும், ஆதவன், கிருஷ்ணா (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரி-மாணவர்) ரேகா, தீபன் (மாணவன் ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
(ஆவரங்கால் சந்தி),
அச்சுவேலி.

(சி-47074)
(54-15-13)

தகவல்:
ஆ. சோமசுந்தரம் (மாமன்).
தொ.பே.: 0777 074744

## கண்ணீர் காணிக்கை

ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக போசகரும் நிலையப் பொருளாளரும் எமது கழக வீரர்களான ஆதவன் , கிருஷ்ணா, தேகாதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையுமான

### அமரர் தாமு மார்க்கண்டு

சிரித்தமுகம் சிதறாத சிந்தை விரிந்த உள்ளம் விகடப் பேச்சு
கனிந்த பேச்சு கபடமில்லா உள்ளம்.
ஊருக்கு உழைப்பதிலே உற்சாகம் மிகுநடை
இத்தனையும் சுமந்த மார்க்கண்டே!
ஏனிந்த விளையாட்டு எம்மோடு ஆடிவிட்டீர்!
நாமிங்கு எண்ணவில்லை ஈதீங்கு நடக்குமென்று
நிலையத்தை வளர்க்க வலதுகரம் தந்தவன் நீ
விளையாட்டுத் துறையென்றால் விருப்புடனே ஊக்குவித்தாய்
எல்லாம் முடிந்ததுவே எங்குற்றாய் நீ இன்று
உன் சேவை நிலைத்து நிற்க!
உன் ஆன்மா அமைதிகொள்க!
ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி!

உம் பிரிவால் துயருறும்
ஸ்ரீ விக்னேஸ்வரா சனசமூக நிலைய
அங்கத்தவர்களும், விளையாட்டுக்கழக
உறுப்பினர்களும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(சி-47075)
(54-15-13)

## சந்திவெளியில் இருவர் கொலை

மட்டக்களப்பு சந்திவெளியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இராணுவத்தினர் மீது முதலில் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனவும் படையினர் திருப்பித் தாக்கியதில் புலி உறுப்பினர்கள் இருவர் பலியாகினர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொல்லப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து ரி.56 ரகத் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள், கைத்தொலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டன என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார். (க-6)

# திருமலையில் இருவர் கொலை

திருகோணமலை,டிசெ.27

திருமலை நகர்ப்புறத்தில் ஓட்டோ சாரதிகளான இரண்டு தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் தினத்தன்று சுட்டும், கத்தியால் குத்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த விஜயசீலன் (வயது - 30) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான ஓட்டோ சாரதியே திருமலை - கண்டி வீதியில் ஐந்தாம் கட்டையில் வைத்துச் சுடப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று மாலை 4.30 மணியளவில் பாலையூற்றில் தான் குடியிருக்கும் வாடகை வீட்டிலிருந்து புறப்பட்டவர் வீடு திரும்பவில்லை என உறவினர்கள் கூறுகின்றனர். இரவு 7.30 மணியளவில் கந்தசாமி கோவிலடியில் உள்ள தாயார் வீட்டிலிருந்து பாலையூற்றிற்கு செல்கிறார் எனக் கூறிவிட்டுப் புறப்பட்ட அவர், பாலையூற்றில் உள்ள தமது வாடகைவீட்டுக்குத் திரும்பவேயில்லை.

பின்னர் நள்ளிரவு அளவில் பொலிஸார் வீட்டுக்கு வந்து அவர் இறந்துவிட்ட தகவலையும் பிரேதம் வைத்தியசாலையில் உள்ளது என்பதையும் கூறியபின்பே விடயம் தங்களுக்குத் தெரியவந்தது என உறவினர்கள் குறிப்பிட்டனர்.

மற்றொருவர் வித்தியாலயம் வீதியைச் சேர்ந்த இன்பரட்ணம் ரமணன் (வயது -26) என்பவராவார். இவரை கன்னியா வீதியில், வில்கம் விகாரைப் பகுதியில் வைத்துக்குத்திக்கொலை செய்துள்ளனர். உடலில் ஐந்து கத்திக் குத்துகள் விழுந்துள்ளன. எவ்வாறு இவர் அழைத்துச் செல்லப்பட்டார், யார் அழைத்துச் சென்றார்கள் என்ற விவரம் தெரியவரவில்லை. மாலை 7 மணிக்குப் பிறகே சம்பவம் நடைபெற்றுள்ளது.

இவரிடம் இருந்த ரூபா இருபத்தையாயிரம் பணம், மோதிரம், சங்கிலி போன்ற நகைகள், கையடக்கத் தொலைபேசி எவையும் கொலையாளிகளால் அபகரிக்கப்படவில்லை. அனைத்தையும் அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர். இவையனைத்தும் உப்புவெளிப் பொலிஸில் உள்ளன என உறவினர்கள் தெரிவித்தனர். கொலை நோக்கத்துடனே இவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவரின் மனைவி கனடாவில் வாழ்கிறார். இவரும் கனடாவுக்குச் செல்லவதற்கான ஆயத்தத்தில் இருந்தார்.

இரண்டு கொலைகளும் பெரும்பான்மை இனத்தவர் வாழும் பகுதிகளிலேயே நடைபெற்றுள்ளன. பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## கறுப்புக் கொடிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஸ்ரீலங்காப் படையினரால் கோரமாக சுடப்பட்டும், எரித்தும், படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மாமனிதரும், நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த அரசியல்வாதியுமான ஜோசப் பரராஜசிங்கம் தேவாலயத்தில் வைத்து ஸ்ரீலங்காப் புலனாய் வுத்துறை யினராலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளாலும் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதனைவிட புங்குடுதீவில் இளைய தம்பி தர்சினி (வயது - 20) என்ற யுவதி ஸ்ரீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தப்பயங்கரமான சூழல் காரணமாக தமிழர் பிரதேசம் எங்கும் மயான பூமியாகியுள்ளது.

இன்று இராணுவத்திற்குள் ஊடுருவியிருக்கும் அரசியல்வாதிகளே, இந்தக் கொலைகள் அனைத்துக்கும் காரணமாக இருக்கின்றார்கள். இராணுவத்தின் அராஜகத்தைக் கண்டித்தும், படுகொலைசெய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் இன்றைய தினத்தைத் துக்கதினமாக கறுப்புக்கொடிகளைக் கட்டுவதினூடாகவும், சோக கீதங்களை இசைப்பதினூடாகவும், அனுஷ்டிக்குமாறு அன்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# புளொட்டின் திருப்பதி மாஸ்டர் வவுனியாவில் சுட்டுக் கொலை

வவுனியா, டிச.27

புளொட் இயக்கத்தின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தரும், அக்கட்சியின் மூத்த உறுப்பினருமான திருப்பதி மாஸ்டர் நேற்று பிற்பகல் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழு இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கக் கூடுமென்று வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருப்பதி மாஸ்டர், புளொட் இயக்கத்தின் நீண்ட கால உறுப்பினராவார். இறுதியாக இவர் இயக்கத்தின் அரசியல் பிரிவின் முக்கியஸ்தராகக் கடமையாற்றினார்.

வவுனியா பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

## நேற்றும் பரவலாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்புட்டது. மந்திகை மடத்தடிப் பகுதியில் வீதிரோந்தில் ஈடுபட்ட படையினர் மீதும் நேற்று மாலை கிரனேட் வீசப்பட்டதாகக் கூறப்பட்டது.

கிரனேட் தாக்குதல் இடம்பெற்ற இடங்களில் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி பொது மக்களை தாக்கினர் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, இன்று அதிகாலைவரை ஆங்காங்கே படையினரை இலக்குவைத்து கிரனேட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக எமது பிரதேச செய்தியாளர்களிடம் இருந்து தகவல்கள் கிடைத்துக்கொண்டிருந்தன. (ஒ-6)

## 5 திட்டங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மின்சார சபைக்கு சுமார் 400 கோடி ரூபாவும்-

தபால் சேவை சீரமைப்புக்காகத் தபால் திணைக்களத்திற்கு சுமார் 372 கோடி ரூபாவும்-

புள்ளிவிவரத் திணைக்களத்திற்கு கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக சுமார் 125 கோடி ரூபாவும் -

முன்னர் உலக வங்கியினால் வழங்கப்பட இருந்தன. இத்திட்டங்களே தற்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. (க)

## சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை குடாநாட்டில் பரமேஸ்வராச் சந்தி உட்பட மேலும் சில இடங்களில் இளைஞர்களை நீண்டநேரம் தடுத்து வைத்து படையினர் விசாரணை நடத் தினர் என்றும் கூறப்பட்டது. (ஒ-6)

## நாளை கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுடல் இன்றைய தினம் வவுனியா மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும். நாளை கிளிநொச்சிக்குப் பூதவுடல் எடுத்துவரப்பட்ட பின்னர் அங்கு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் இயக்க முக்கியஸ்தர்கள் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

கிளிநொச்சிக்கு விரையவுள்ள இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான், மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோரும் ஜோசப் எம்.பியின் பூதவுடலுக்கு அங்கு வைத்து அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

நாளைமறுதினம் வியாழன் முல்லைத்தீவில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ள ஜோசப் எம்.பியின் பூதவுடல் பின்னர் மட்டக்களப்பிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

## புலிகளின் பிரதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்களின் அஞ்சலிக்காக நேற்று எடுத்துச் செல்லப்பட்டது.

கரடியனாறு தேனகம் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த ஜோசப் எம்.பியின் பூதவுடலுக்கு புலிகளின் தளபதிகளும், போராளிகளும் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா வைத்தியசாலையில் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தபோது பெருமளவிலான பொதுமக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர். பலர் கண்ணீர்விட்டு அழுதமை மனதை உருக்குவதாக அமைந்திருந்ததென அங்கிருக்கும் எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதன் பின்னர் நேற்று மாலை ஆரையம்பதி மற்றும் கிரான்குளம் பகுதி மக்களின் அஞ்சலிக்காக கொண்டுசெல்லப்பட்ட பூதவுடல் பின்னர் அவரது இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி கதிர்காமர், கனகசபை, அரியநேத்திரன் ஆகியோர் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர் ஆகியோரும் பங்கு கொண்டனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த ஜோசப் எம்.பியின் மனைவியின் உடல்நிலை படிப்படியாக தேறிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேசமயம், ஜோசப் எம்.பியின் இறுதிக் கிரியைகளை எப்போது நடத்துவது என்பது பற்றி நேற்றுமாலை வரை தீர்மானமெதுவும் எடுக்கப்படவில்லை. வெளிநாட்டிலுள்ள அவரது மகள் ஒருவர் நாடு திரும்பிய பின்னர் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## யாழில் அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கே தாம் நினைத்த நேரங்களில் எல்லாம் படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

படையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படும் சமயங்களில் எல்லாம் அவர்கள் கேள்வியின்றிக் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்துகின்றனர். இதில் பலர் காயமடைகின்றனர்; சிலர் உயிரிழக்கின்றனர். கடந்த ஒரு வாரகாலத்தில் மட்டும் 15க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படையினரின் சூட்டுக்கு இலக்காகியும் தாக்குதலுக்கு இலக்காகியும் படுகாயமடைந்துள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரின் இத்தகைய செயல்களால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இராணுவ அராஜகத்தை உடனடியாக நிறுத்தக் கோரியும் அரச நிர்வாக ஊழியர்களை தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு தமிழ்த் தேசியத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கையை ஏற்று யாழ். செயலகம், பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்கள், பல்கலைக்கழகம் போன்ற அரசு சார் நிறுவனங்கள் என்பவற்றின் ஊழியர்கள் பணிக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் அனைத்துத் அரச அலுவலகங்களும் நேற்று வெறிச்சோடிக் கிடந்தன. வாசல்களில் காவலாளிகளைத் தவிர ஏனைய ஊழியர்கள் எவரும் காணப்படவில்லை. இதனால், அலுவலகங்களின் வாசல்களில் இழுத்து மூடப்பட்டிருந்தன.

அவரச - அத்தியாவசிய சேவையான வைத்திய சேவை மட்டும் நேற்று இடம்பெற்றது. மருத்துவமனைகளுக்கு ஊழியர்கள் வருகை தந்தனர். எனினும் போராட்டம் பற்றி அறிவிப்பு ஏற்கனவே வெளியாகி இருந்தமையால், வைத்தியசாலைக்குச் செல்வோர் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

அரச அலுவலங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததால் தமது சொந்த அலுவல்களுக்காக அவற்றை நாடுவோர் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டனர். அரசு சார் தொழிற் கல்வி நிலையங்களும் மூடப்பட்டிருந்ததால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிப்படைந்தன.

யாழ். குடாநாட்டில் இயல்பு நிலை மீண்டும் தோற்றுவிக்கப்படும் வரையும் இந்தப் போராட்டம் தொடரும் என்று தமிழ்த் தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தில் வங்கிகளின் ஊழியர்களும் இன்று இணைந்து கொள்வர் என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று வங்கி விடுமுறை என்பதனால் அவை இயங்கவில்லை. இன்றுமுதல் தீர்வு கிடைக்கும் வரையும் வங்கி ஊழியர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று வங்கி ஊழியர் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

(ஐ-7-8-11-15-17-49-70-86-173)


**எடிசன் அக்கடமி**

| தலைமை நிறுவனம் | கிளை நிறுவனம் |
| --- | --- |
| 413, K.K.S. வீதி | 18, வைமன் றோட் |
| யாழ்ப்பாணம். | நல்லூர். |

**வகுப்புகள் ஆரம்பம்**

தரம் 6 முதல் O/L வரை

Grade 6,7,8,9, English medium

மேற்குறித்த அனைத்து வகுப்புகளும் எமது இரு நிறுவனத்திலும் மீள ஆரம்பம்.

குறிப்பு **ஆரம்பம் 26.12.2005 திங்கள் 5 p.m.**

- தரம் 9,10,11ற்கு கணிதம் வாரத்தில் 6 மணிநேரமும் விஞ்ஞானம் வாரத்தில் 8 மணி நேரமும் நடைபெறுகின்றது.
- தரம் 9,10,11ற்கு அலகு ரீதியாக விஞ்ஞான வினாவிடை வகுப்புகள் மருத்துவபீட மாணவர்களால் நடத்தப்படுகின்றது.
- தரம் 6,7,8,ற்கு கணிதம் வாரத்தில் 4 மணி நேரம் நடைபெறுகின்றது.
- தரம் 6 முதல் O/L வரை கணித பாடத்தில் குறைந்த புள்ளிகளைப்பெறும் மாணவர்களுக்கு மேலதிக விசேட வகுப்புகள் January முதல் ஆரம்பமாகும்.

(44620)



**அறிவித்தல்**

S.L.A.S

போட்டிப் பரீட்சைக்கான முற்றிலும் எதிர்பார்க்கும்

**பொது அறிவு**

நூல் சகல புத்தக சாலைகளிலும்

ஆக்கம்

P. கமல்தாசன்

(44623)


## ஜோசப்பின் படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ செயலாளர் நாயகம் செல்வம் அடைக்கலநாதன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தக் கூட்டறிக்கையில் ஒப்பமிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பில் புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் தின நள்ளிரவு ஆராதனையின்போது மிகவும் கோழைத்தனமாகவும், வெறுக்கத்தக்க முறையிலும் இடம்பெற்ற ஜோசப் பரராஜசிங்கத்தின் கொடூரமான படுகொலையை இலங்கை தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வன்மையாகக் கண்டிக்கிறது.

சமாதான முயற்சிகள் ஓர் இக்கட்டான நிலையில் உள்ள காலகட்டத்தில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மட்டக்களப்பில் பெரும் திரளான பக்தர்கள் கூடியிருந்த தேவாலயத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார் ஜோசப் பரராஜசிங்கம்.

கண்கண்ட சாட்சிகளின் பிரகாரம் தேவலாயத்திற்குச் செல்லும் தெரு நீளமாக இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் தேவாலயத்திற்கு முன்பாக பொலீஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையானது சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்தின் நேர்மையானதும், நல்நோக்கம் கொண்டதுமான, விசுவாசமான பற்றுறுதி மீது மிகப் பெரிய சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையானது சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் தெளிவான பற்றுறுதி கொண்டிருந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை சமாதான முயற்சிகள் மீது வீழ்ந்த பாரிய அடி என்பதை சுட்டிக்காட்ட வேண்டியது எமது கடமையென நாம் கருதுகின்றோம்.

உடனடியாக இவ்விதமான, இரகசியமான, தீயநோக்கம் கொண்ட தமிழ்த் துணைப் படையுடனான சகல தொடர்புகளையும் துண்டிக்கும் படியாக தங்களது அரசாங்கத்தை வற்புறுத்திக்கேட்கின்றோம். அத்துடன் சமாதான முயற்சிகளில் ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இதுவே ஒரே வழியாகும்.

- இப்படி அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.